
www.tamilarangam.net

# தூண்டில்






AYA
7 RUE DE COLOMBES
2600 ASNIERES SUR -
SEINE : FRANCE

TAMILISCHE ZEITSCHRIFT DES SÜDASIEN BÜRO NR. 11

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சில குறிப்புகள்

ஒவ்வொரு மாதமும் கலை, இலக்கியங்கள், தகவல்களைத் தேடித் 'தூண்டி
போடும் எங்களுடன் உங்களையும் சேர்ந்து கொள்ளும்படி அன்புடன் அழை
கிறோம். தூண்டிலில் காத்திரமான, ஆரோக்கியமான, தரமான ஆக்கங்களை
சிக்க வைப்பது உங்களதும் பொறுப்பே. தூண்டிலுக்கு ஆக்கப் பஞ்சம் ஏற்ப
டாமல் கவனித்துக் கொள்ளுங்கள்.

தூண்டிலுக்கு அனுப்பப்படும் ஆக்கங்கள் முழுத் தாளின் ஒரு பக்கத்தில் மட்
டும் எழுதப்பட்டிருத்தல் விரும்பத் தக்கது. ஆக்கங்களை அனுப்புபவர்கள் தங்
களுடைய சொந்தப் பெயர், முகவரிகளைத் தெளிவாக எழுத வேண்டும்.
சொந்தப் பெயரிலா, புனை பெயரிலா ஆக்கங்கள் பிரசுரிக்கப்பட வேண்
டும் என்பதையும் குறிப்பிட வேண்டும்.

உங்கள் ஆக்கங்களுக்கான தலைப்புகளையும், பிரசுரிக்க வேண்டிய பெயரை
யும் நீங்களே அழகான கையெழுத்தில், பொருத்தமான அளவுகளில் எழுதியனு
ப்பலாம். உங்கள் ஆக்கங்களுக்கான சித்திரங்களையும் நீங்களே வரைந்து
அனுப்பலாம்.

தூண்டிலில் இப்போது வெளிவந்து கொண்டிருக்கும் சிறுகதை, கவிதை போன்
ற குறிப்பிட்ட பகுதிகள்தான் தொடர வேண்டும் என்றில்லை. உங்கள் மனதில்
தோன்றும் புதிய அம்சங்களையும் அனுப்பி வையுங்கள். பொருத்தமானவை
நிச்சயம் சேர்த்துக் கொள்ளப்படும்.

ஒவ்வொரு நகரங்களிலுமிருக்கும் தூண்டில் வாசகர்கள் தாங்களே நிருபர்க
ளாக மாறி தங்கள் நகரில் நடக்கும் செய்திகளையும், தமிழர்களுடன் சம்ப
ந்தப்பட்ட தகவல்களையும் அனுப்பி வைக்கலாம். இதே போல் ஏனைய
நாடுகளிலுள்ள வாசகர்கள் தங்கள் நாடுகளின் செய்திகள், அங்கிருக்கும் ஈழ
த்தமிழர்களின் வாழ்க்கை முறைகள் பற்றி எழுதியனுப்பினால் ஏனைய தூண்டில்
வாசகர்களும் இந்த விடயங்களை அறிந்து கொள்வார்கள்.

தூண்டிலைப் படிப்பதுடனும், ஆக்கங்களை அனுப்புவதுடனும் மட்டும் நின்று விட
மல் தூண்டிலைப் பற்றிய முழுமையான விமர்சனங்களையும் அனுப்பி வையுங்
கள். தரமான ஆக்கங்களைப் பாராட்டி ஊக்குவிப்பதுடன், தவறுகளைச் சுட்
டிக் காட்டி திருத்துவதும் உண்மையான வாசகரின் கடமையாகும்.

**வாசகர்களின் ஆர்வம் சஞ்சிகை வளர்ச்சிக்கு அவசியமாகும்.**

— கடலோடிகள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கலைஞர்களின் கடமைகள்

கலைகள் மனிதர்களின் பொழுதுபோக்குக்ள் மட்டுமல்ல. எழுத்துகள், பேச்சுகள் போல மனிதர்களை மனிதர்களுடன் தொடர்பாக்கும் ஊடகங்களில் கலையும் அடங்கும். நடனம், நாடகம், இசை என பல பிரிவுகளையுள்ளடக்கியிருக்கும் கலை விருந்தாக மட்டுமில்லாமல் 'விற்றமினாகவும்' இருக்க வேண்டும். வாழ்க்கையோடு போராடுவதற்காக யெந்திரமாகி உழைத்துக் கொண்டிருக்கும் மனிதர்களுக்கு அவர்களுடைய ஓய்வு நேரத்தில் கலைகளால் ஆத்ம சந்தோசத்தைக் கொடுக்க முடியும். அதே நேரத்தில் நல்ல கருத்துகளை ரசிகர்கள் மனதில் பதிக்கும் ஒரு சந்தர்ப்பமாகவும் கலைகளைப் பயன்படுத்த வேண்டும்.

இப்படி முக்கியத்துவம் வாய்ந்த கலை இன்று அந்நிய நாடுகளில் வாழும் தமிழர்களிடையே என்ன நிலையில் இருக்கிறது? அந்நிய நாடுகளிலிருக்கும் ஈழத் தமிழர்களின் கலாரசனை எப்படியிருக்கிறது? அந்நிய நாடுகளிலிருக்கும் ஈழக் கலைஞர்கள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்? கலைகளுக்கு எப்படி ஆதரவு வழங்கப்படுகிறது என்ற கேள்விகளுக்கு விடை காண்பதற்கு முன் 'ஈழத்தில் படுகொலைகள் தொடர்கையில் இந்தக் கலை நிகழ்ச்சிகள் அவசியம்தானா?' என்று அங்கலாய்ப்பவர்களுக்குப் பதிலளிப்பது அவசியம்.

ஈழத்தில் அநியாயச் சாவுகள் நடக்கிறதே, என்னால் எப்படி ரசிக்க முடியும்? என்று ரேப்ரெக்கோடரில் பாட்டுக் கேட்காமல், இந்தியாவிலிருந்து உடனுக்குடன் பறந்து வரும் வீடியோப் படங்களைப் பார்க்காமல், தொலைக் காட்சியைப் பார்க்காமல், நகரங்களைச் சுற்றிப் பார்க்காமல், விருந்தென்றும், 'விசிற்றிங்'கென்றும் ஏனையவர்களுடன் கூடிக் குலாவாமல் யாராவது தான் உண்டு, தன் அறையுண்டு என்றிருக்கிறார்களா? அப்படி எல்லோரையும் இருக்கச் சொல்ல முடியுமா?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

அந்நிய நாட்டின் சூழ்நிலைகளுடனும், தனிமையுடனும், அரசியல் தஞ்சச் சட்டங்களின் கடுமையுடனும் போராடித் தாக்குப் பிடிக்க முடியாமல் தோற்றுப் போபவர்களுக்குச் சித்தப்பிரமையாக்கலாம். எனவேதான் மேலே குறிப்பிட்டவை தவிர்க்க முடியாமல் அனுமதிக்கப்படுகின்றன. இவற்றையே தவிர்க்க முடியாதபோது என் கலை நிகழ்ச்சிகள் நடாத்தப்படக் கூடாது?

'தண்ணிப் பார்ட்டி' வைப்பதும், குடித்துக் கும்மாளமடிப்பதும், கேளிக்கைப் பயணமாகச் சுற்றுலாக்கள் செய்வதும், வாரத்திற்கொருமுறை புதிய உடைகள் வாங்கியணிவதும், சங்கிலிகள், காப்புகளை வாங்கி உடம்பு முழுக்கப் பூட்டுவதும், பிறந்த நாளையும், திருமணத்தையும் பிரம்மாண்டமான கொண்டாட்டங்களாக்குவதும், மற்றவர்களைப் பற்றித் தேவையில்லாமல் அரட்டையடிப்பதும்தான் நிறுத்தப்பட வேண்டுமே தவிர கலை நிகழ்ச்சிகள் அல்ல.

கலை நிகழ்ச்சிகள் என்றால் என்ன என்பதை முதலில் புரிந்து கொள்ள வேண்டும். மணித்தியாலங்களுடன் ஓடி, உழைத்து, ஓய்வில் தங்கள் மனக் களைப்பைத் தீர்க்க உற்சாகத்தையும், சந்தோசத்தையும் தேடுவது மனித இயற்கையே. இதைப் பலவீனமாக்கிய பல 'காரியவாதிகள்' இந்தப் பலவீனத்தைத் தமக்கு சாதகமாக்கிப் பணம் பிடுங்கிக் கொண்டிருப்பதுடன், பலரின் கலை இரசனைகளையும் மோசமான விதத்தில் மாற்றிக் கொண்டிருக்கிறார்கள். தென்னிந்தியாவில் மக்களை மயக்கிய 'நட்சத்திரங்களை' ஐரோப்பிய நாடுகளுக்கு அழைத்து, அவர்களைக் 'காட்டி' இங்குள்ள அகதிகளிடம் பணத்தைப் பிடுங்கி, நட்சத்திரங்களுக்கும் கொடுத்து தாங்களும் எடுத்துக் கொள்கிறார்கள். இவற்றைப் பற்றி தாண்டிலில் 'நவீன சுரண்டல்' என்ற தலைப்பில் கட்டுரையாளர் குறிப்பிட்டுள்ளார். இப்படி ஆங்காங்கேயிருந்து எதிர்ப்புக் குரல் வந்தும் என்ன பயன்? இந்தக் 'கவர்ச்சி வியாபாரம்' இன்னும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. இப்படியே தொடர்ந்து கொண்டு போனால் பாடகர்கள், நடிகர்கள் வரிசையில் பம்பாயிலிருக்கும் சிவப்பு விளக்குப் பகுதியாளர்களும் வரவழைக்கப்பட்டு தங்கள் உடம்பைக் காட்டலாம். அதைக் கண்டு களிக்கவும் ரசிகர்கள் தயாராகலாம்.

இவையல்ல கலை நிகழ்ச்சிகள். இவையெல்லாம் மோசமான வியாபாரங்கள். இவைகள் உடனடியாக நிறுத்தப் படவேண்டும். இதற்கு எல்லோரும் முயற்சி செய்ய வேண்டும்.

போராட்டத்திற்கும் பங்களிக்கப்படாமல், ஈழத்தில் எந்தவித உதவியுமில்லாமல் நிர்க்கதியாக நிற்கும் அகதிகளுக்கும் உதவாமல், உடல் ஊனமுற்றவர்களுக்குக் கிடைக்கும் நிலையங்களுக்கும் உதவாமல், இவ்வளவும் ஏன், தாங்கள் பெற்றவர்களை அந்நியநாடுகளுக்கு அனுப்பி வைத்த பெற்றோ

ர்களின் கஞ்சிக்குக் கூடப் போய்ச் சேராமல், இங்கிருக்கும் அகதிகளின் பணம் கவர்ச்சி வியாபாரம் மூலம் ஏற்கெனவே கறுப்புப் பணமாகப் பதுக்கி வைத்திருப்பவர்களுக்குத்தான் போய்ச் சேருகிறது. மணிக் கணக்காகச் சேகரித்த பணம் ஈழத்துடன் சம்பந்தப்படாத யாரோவிடம் போய் பெட்டிக்குள் அடைபட்டுக் கிடக்கிறது. ரசிகர்களின் பலவீனங்களைப் பயன்படுத்தி ஏமாற்றிப் பணம் பறிக்கும் இங்குள்ள கும்பல்களிடம் போய்ச் சேருகிறது. இது தேவைதானா?

இப்படியான கவர்ச்சி வியாபாரங்களை நடாத்திப் பணம்சேர்ப்பவர்களே சிந்தியுங்கள். இந்த வியாபாரத்தை ரசித்து ஏமாந்து பணத்தைப் பறி கொடுப்பதுடன் ரசனையையும் மழுங்கடித்துக் கொள்ளும் ரசிகர்களே சிந்தியுங்கள்.

கலை நிகழ்ச்சிகள் எவை என்பதைத் தெரிந்து கொண்டே எங்களது ஆதரவை வழங்க வேண்டும். மேற் குறிப்பிட்ட வியாபாரங்களை பணத்துக்காகத்தான் நடாத்துகிறார்கள் என்பது தெரிந்த விடயம். ஆனால் அவற்றை ரசிக்கப் போபவர்களுக்கு இரண்டு காரணங்கள் இருக்கலாம். ஒன்று அறியாமை. இரண்டாவது உண்மையான கலை நிகழ்ச்சிகள் இல்லாமை. இதை இன்னொரு விதமாகவும் விளக்கலாம். வீட்டில் அன்பாகப் பரிமாறப்படும் சாப்பாட்டை வெறுத்து கடைக்குச் சாப்பிடப் போவபருக்குத் 'திமிர்' என்று தான் சொல்லலாம். வீட்டில் இல்லாமல் கடைக்குச் சாப்பிடப் போபவர்களைத் தடுக்க வீட்டில் சாப்பாடு போடத்தான் வேண்டும்.

இதேபோல ரசனையை மழுங்கடித்து, காசு பறிக்கும் நட்சத்திர விழக்களுக்குப் போபவர்களைத் தடுக்க எமது கலைஞர்கள் முன் வர வேண்டும். கலை ஆர்வமுள்ளவர்கள் இவர்களுக்கு ஆதரவளிக்க வேண்டும். கலைஞர்கள் கலை நிகழ்ச்சிகளை நடாத்தி தமது திறமைகளால் ரசிகர்களைக் கவர வேண்டும். ஈழத்துடன் அந்நியப்படாமல் கலைகளைச் சரியான வடிவங்களில் வழங்குவதன் மூலம் ரசிகர்களின் ஓய்வு நேரத்தைப் பயனுள்ளதாக்குவதோடு, அவர்களின் அந்நியமாதலையும் தடுக்கலாம். நம்மவர்கள் கலை நிகழ்ச்சிகளை நடாத்த வேண்டிய அவசியங்களில் இதுவும் ஒன்று.

தாய்நாட்டில் வாழ முடியாமல் எத்தனையோ சிறுர்கள் இன்று அந்நிய நாடுகளுக்கு அவசரமாகக் கூட்டி வரப்பட்டிருக்கின்றார்கள். இந்த அந்நிய நாடுகளில் பிறந்த பிள்ளைகள் தாய்நாட்டைத் தெரிந்திராத நிலையில் முற்றிலும் அந்நியமான சூழ்நிலையில் வளர்ந்து கொண்டிருக்கிறார்கள். இவர்களுடைய வாழ்க்கை பாடசாலையும், வீடுமாகவுமே இருக்கிறது. இந்த 'அடக்கப்பட்ட' குறுகிய வாழ்க்கை முறை சிறுவர்களின் மனோநிலையை எவ்வளவு தூரம் பாதிக்கும் என எத்தனை பெற்றோர்கள் சிந்தித்துப் பார்க்கிறார்கள்?

www.tamilarangam.net

பெரியவர்கள் என்றால் வீடியோ பார்க்கலாம். பாட்டுக் கேட்கலாம். நான்கு பேர் சந்தித்து அரட்டையடிக்கலாம். ஊரைச் சுற்றலாம். ஆனால் இந்தச் சிறார்களால் என்ன செய்ய முடியும்? பள்ளித் தோழர்களும் அந்நிய மொழியில் கதைப்பார்கள். அவர்களுடன் மனம் விட்டு உரையாடவும் முடியாது. வீட்டில் கூட சத்தம் கேட்டால் ஏனைய வீட்டுக்காரர்கள் பேசுவார்கள் என்ற பயத்தில் பேசாமல் இரு என்ற பலத்த கண்டிப்பு. தங்களுடைய சந்தோசங்களையெல்லாம் மூட்டை கட்டி வைக்க இந்தச் சிறார்கள் செய்த குற்றமென்ன? துள்ளித் திரிய வேண்டிய பருவத்தில் இயற்கைக்கு மாறாகச் சிறுவர்கள் அடைத்து வைக்கப்பட்டிருந்தால் அவர்களுடைய மனநிலை பாதிக்கப்படாதா? அறிவு வளர்ச்சிக்குக் கல்வி எனும் தீனி போடும் அதே நேரம் மன வளர்ச்சிக்கு சந்தோசம் என்னும் தீனி போடுவதும் அவசியமல்லவா? இதனை எத்தனை பெற்றோர்கள் உணர்ந்திருக்கிறார்கள்?

'இளமையிற் கல்' என்பது போல சின்னஞ் சிறுவர்கள் கலைகளைப் பயில்வதால் கலைக்கு நல்ல அத்திவாரமிடப்படுகிறது. புதிய கலைஞர்கள் உருவாகுகிறார்கள். புதிய கலை வடிவங்கள் கூட உருவாகலாம். இங்கே நேரமிருக்கிறது. கலைஞர்களும் இருக்கிறார்கள். எனவே பெற்றோர்கள் அதிகம் சிரமப்பட வேண்டியதில்லை. பிள்ளைகள் தங்களுக்கு ஆர்வமான கலைகளைப் பயில பெற்றோர்கள் வசதி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். ஊக்கமளிக்க வேண்டும். அவ்வப்போது கலை நிகழ்ச்சிகள் நடாத்திப் பயின்ற கலைஞர்களை உற்சாகப்படுத்த வேண்டும். மட்டமான நிகழ்ச்சிகளால் தங்கள் ரசனைகளை மழுங்கடித்துக் கொண்டிருக்கும் ரசிகர்களை இந்தக் கலைஞர்கள் மூலம் தடுத்து நிறுத்த வேண்டும்.

நம்மவர்களின் கலை நிகழ்ச்சிகள் ஏன் நடாத்தப்பட வேண்டும் இங்குள்ள சிறார்களுக்கு ஏன் கலைகள் பயிற்றப்பட வேண்டும் என்பதை மட்டும் தெரிந்து கொண்டால் மட்டும் போதாது. சில சுரண்டல் வாதிகளால் அகதிகளிடமிருந்து பணத்தைச் சுரண்டுவதற்காக நடத்தப்படும் நட்சத்திர விழாக்கள் போன்றவற்றிற்கு தமது கடமைகளை மறந்ததில் நமது கலைஞர்கள் எப்படித் துணை போகிறார்கள் என்றும் பார்க்க வேண்டும்.

பணம் மட்டும்தான் குறிக்கோள் என்பதை எமது கலைஞர்கள் மறந்து விட வேண்டும். பணம் அவசியமேயெனினும் கலையுடன் ஒப்பிடும்பொழுது அது இரண்டாம் பட்சமே. கலைஞர்கள் தங்களுடைய நேரங்களைக் கலைக்காக ஒதுக்கி புதிய கலைஞர்களை உருவாக்க வேண்டும். கலை என்பது தனி நபர்களின் சொத்தல்ல. அவை ஒரு சிலருடனேயே அழிந்து போகாமல் ஒவ்வொரு தலைமுறைக்கும் தொடர வேண்டும். இப்படித் தொடர்வதற்கு தம்மால் முடிந்தளவு உதவ வேண்டியது கலைஞர்களின் கடமை. எனவே கலைஞர்கள் தாமாக விரும்பி, முன்வந்து புதிய கலை வாரிசுகளை உருவாக்க வேண்டும். இப்படிச் சேவை செய்ய வரும் கலைஞர்களுக்கு எல்லோரும் முழு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒத்துழைப்பும், ஆதரவும் வழங்க வேண்டும்.

கலைஞர்களுக்கிடையில் ஆரோக்கியமான போட்டி இருக்கலாம். நிச்சயமாக பொறாமை இருக்கக் கூடாது. துரதிஷ்டவசமாக இங்குள்ள நமது கலைஞர்களில் பலரை பொறாமை பயங்கரமாகப் பீடித்துள்ளதை அறிய முடிகிறது. இது கலைக்குரியதாகும். இந்தப் பொறாமையால் கலைகள் அலங்கோலமாக்கப்படுகின்றன. கேலிக் கூத்தாக்கப்படுகின்றன. இதனால் கலைச் சீரழிவு ஏற்படுவதுடன் ரசிகர்களுக்கும் வெறுப்பு உண்டாகிறது. பொறாமை பிடித்த ஆசானால் பயிற்றப்படும் மாணக்கர்களின் கலை ஆரோக்கியமும் சிதைக்கப்படுகிறது. எனவே இந்த நிலை தொடரக் கூடாது. அனைத்துக் கலைஞர்களிடமும் ஒற்றுமை வேண்டும். தம்மை மோதவிடும் மூன்றுமவர்களின் சூழ்ச்சிக்குக் கலைஞர்கள் பலியாகக் கூடாது. கலை ரீதியாக அனைத்து கலைஞர்களும் ஐக்கியப்பட வேண்டும். இதற்காக எல்லாக் கலைஞர்களும் ஒன்றாகச் சேர்ந்து பொது அமைப்பை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். தங்களுக்கிடையேயான முரண்பாடுகளை நேரடியாகக் கலந்துரையாடி தீர்த்துக் கொள்ள வேண்டும். கலையார்வம் உள்ள எல்லோரும் இதற்கு உதவ வேண்டும்.

குறிப்பிட்ட நிகழ்ச்சிகளுக்கு மட்டும் பங்குபற்ற வேண்டும் என கலைஞர்களைச் சிலர் கட்டுப்படுத்திக் கொண்டிருப்பதாகவும் அறிகிறோம். கலையைக் கட்டுப்படுத்துவது, தடை செய்வது என்பன அறிவான செயல்கள் அல்ல என்பதை சம்பந்தப்பட்டவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். மற்றவர்களும் இவர்களுக்குப் புரிய வைக்க வேண்டும்.

கலைஞர்களின் இந்தக் கடமைகளை விட முக்கியமானதொன்றிருக்கிறது. பாடகர்கள் தொடர்ந்தும் தியாகராஜ கீர்த்தனைகளை மட்டும் பாடிக் கொண்டிருப்பதும், நர்த்தகர்கள் தொடர்ந்தும் இடது காலைத் தூக்கியாடும் நடராஜனை மட்டும் துதித்துக் கொண்டிருப்பதும், நடிகர்கள் தொடர்ந்தும் விரசமான நகைச்சுவைகளை மட்டும் நடிப்பதும் மாற்றப்பட வேண்டும். இதன் அர்த்தம் கலைகளைத் தலைகீழாக மாற்ற வேண்டுமென்பதல்ல. சமகாலப் பிரச்சினைகளிலிருந்து அந்நியப்படாமல் கலைகள் சீர் திருத்தப்பட வேண்டும். காதலையும், வெறும் கற்பனைகளையும் கொண்டிருந்த இலக்கியங்கள் ஈழத்தின் சமகாலப் பிரச்சினைகளுக்கேற்ப எப்படி தம்மை மாற்றிக் கொண்டுள்ளனவோ அதேபோல கலைகளும் தம்மை மாற்றிக் கொள்ள வேண்டும். வெறும் பொழுது போக்குகளுக்காகத்தான் கலைகள் என்ற அபிப்பிராயம் மாற்றப்பட வேண்டுமானால் பயனுள்ள முறையில் கலைகள் சீர் திருத்தப்பட வேண்டும்.

பாடகர்கள் வழமையான சங்கீதப் பாடல்களுடன் புதிய சீர் திருத்தப் பாடல்களையும் தங்களுடைய இசைத் திறமையைப் பயன்படுத்திப் பாட வேண்டும். பாரதியின் கவிதைகளுடன் நமது கவிஞர்களின் தரமான கவி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தைகளேயும் தேர்ந்தெடுத்துப் பாட வேண்டும். நர்த்தகிகள் கோபிகள், கண்ணன் நடனத்துடன் கூடவே ஈழத்தில் வாழும் மக்களின் நிலேமையையும் படம் பிடித்துக் காட்ட வேண்டும். ஈழத்தில் வாழும் உழைக்கும் மக்கள் போராட்டத்திற்கு முன் எப்படி வாழ்ந்தார்கள், போராட்டத்தின்போது எப்படி வாழ்கிறார்கள் என்பதுடன் சமூகச் சீர்கேடுகளேயும் அபிநயித்துக் காட்ட வேண்டும். வாயால் வெறுமனே சொல்வதை விட நாட்டிய பாவங்களால் அபிநயித்துக் காட்டுவது ரசிகர்களின் மனதில் ஆழமாகப் பதியும். நகைச்சுவை நாடகங்களேயும், சரித்திர நாடகங்களேயும் அரைகுறையாக எழுதி மேடையேற்றி விரசமாக்காமல் சீர் திருத்தக் கதைகளேத் தேடி எடுத்து நடிகர்கள் நடிக்க வேண்டும்.

இவைகள் எமது கலேஞர்களால் முடியாத விசயங்கள் அல்ல. திறமையான கலேஞர்கள் கட்டாயமாக முயற்சி செய்ய வேண்டும். உண்மையான ரசிகர்கள் கலேஞர்களின் இந்த முயற்சிகளுக்குப் பூரண ஆதரவும், ஒத்துழைப்பும் வழங்க வேண்டும். கலேஞர்களும், ரசிகர்களும் தங்களுடைய கடமைகளேச் சரியாகப் புரிந்து, ஒன்றாக ஒத்துழைத்து கலேயை வளர்த்தால் நிச்சயமாகக் கலேச் சிறப்புகளேத் தருக்கலாம். அத்துடன் கவர்ச்சி வியாபாரங்களேயும் தருக்கலாம். இங்குள்ள சிறார்களேயும் கலேஞர்களாக்கலாம். ஈழத்திலிருந்து அந்நியமாத லேத் தடுப்பதன் மூலம் ஈழத்துக்கான தனிக் கலே வடிவத்தையும் அமைக்கலாம்.

தங்கள் கடமைகளேச் செய்யத் தயாராகவிருக்கும் பாடகர்கள், நடன ஆசிரியர்கள், வாத்தியக்காரர்கள், நாடகக்காரர்கள், ஆகியோரும் பாடகர்களுக்குப் புதிய சீர் திருத்தப் பாடல்களேக் கொடுக்கக் கூடிய கவிஞர்களும், சமூக சீர் திருத்த நாடகங்களே எழுதக் கூடிய கதை, வசன கர்த்தாக்களும் தங்களுடைய கலேயின் விபரங்களுடன் முகவரி, தொலேபேசி என் போன்ற முழு விபரங்களேயும் எமக்கு அனுப்பி வைத்தால் தூண்டிலில் பிரசுரிப்போம். இதன் மூலம் கலேகளேப் பயில விரும்புபவர்களும், உங்களுடைய முயற்சிகளுக்கு ஆதரவு தெரிவிக்க விரும்புபவர்களும் உங்களுடன் நேரடியாகத் தொடர்பு கொள்வார்கள்.

கலம் பத்தில் வெளியான 'மனிதம் எங்கே?' என்ற நமது கருத்தை விமர்சித்து வந்த கடிதங்களில், பக்கங்களின்மை காரணமாக இந்தக் கலத்தில் பிரசுரிக்க முடியாமல் போன கடிதங்கள் யாவும் அடுத்த கலத்தில் பிரசுரிக்கப்படும்.

— கடலோடிகள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வாசகர் கடிதங்கள்

இன்றைய சமுதாயத்தை ஆட்டிப் படைக்கும் கொடுமைகளில் முக்கியமானவை சாதி, சீதனம் போன்றவையாகும். எனவே அது குறித்துச் சிந்திப்பதும், எழுதுவதும் இயல்பானதே. நமது உணர்வுகளை நாம் வாழுகின்ற சூழ்நிலைகள் தீர்மானிப்பதால் ஒவ்வொரு சமுதாயத்திலும் ஒவ்வொரு கால, கட்டங்களில் வெளிவரும் கலை, இலக்கிய சஞ்சிகைகள் அன்றைய நிலைமைகளின் பிரதிபலிப்பாக விளங்குகின்றன. இவை சமுதாயத்திலும் முக்கிய தாக்கத்தைச் செலுத்துவதாலும், நெறிப்படுத்துவதாலும் அவற்றுக்கும், அவற்றை வழங்கும் படைப்பாளிகளுக்கும் சமுதாயப் பொறுப்புணர்ச்சி இருக்க வேண்டியது அவசியம். படைப்பாளிகளின் பொறுப்புணர்ச்சியின்மை மற்றும் அவர்களின் தவறான பார்வைகள் சமுதாயத்தைத் தவறாக வழி நடத்தவோ, சீரழிவுக்கோ இட்டுச் செல்லலாம். அல்லது அவற்றை ஊக்குவிக்கலாம்.

இந்த வகையில் 'தூண்டில்' போன்றவை குறிப்பிடத் தக்கவை. இதில் வரும் ஆக்கங்களில் போதிய கவனம் செலுத்தப் பட வேண்டும். பிழையான கருத்துகளுடன் பல்வேறு ஆக்கங்கள் வெளிவந்தாலும் மிகவும் முக்கியத்துவம் உடையது என்பதால் ஒரு கவிதையை மாத்திரம் விமர்சனத்திற்கு எடுத்துக் கொள்கிறேன்.

அம்பலவன் புவனேந்திரனின் 'தீயின் வார்ப்புகள்' என்ற கவிதையைப் பார்ப்போம். நமது சமுதாயத்தில் நிலவும் சீதனக் கொடுமையையும், அதனால் பாதிக்கப்பட்ட பெண்ணின் கோப உணர்ச்சிகளையும் கவிதையின் முன் பகுதியில் கவிஞர் நன்றாகவே வெளிப்படுத்துகிறார். இது கவிஞரிடம் உள்ள கவித் திறமையை வெளிப்படுத்துகிறது. ஒரு கவிதைக்கு நல்ல நயம் இருந்துவிட்டால் மட்டும் போதுமா? கூடவே சரியான கருப் பொருளும், சரியான பார்வையும் (தீர்வும்) அவசியமல்லவா?. பொருளற்ற கவிதை வெறும் சொற்சிலம்பமாகவே முடியும். இக் கவிதையில் பொருட் குறையில்லை. ஆயினும் சரியான பார்வையோ, தீர்வோ இல்லை. சீதனப் பிரச்சினையையும், அதனால் பாதிக்கப்படும் பெண்களின் உணர்வுகளையும் எடுத்துக் கொண்ட அவர் அதற்கு வைக்கும் தீர்வு படுபிற்போக்குத்தனமானதும், சீரழிவை நியாயப்படுத்துவதாகவும் உள்ளது.

இன்றைய சீதனக் கொடுமையால் பாதிக்கப்படும் பெண்கள் அதைப் போக்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வதற்கு அக் கொடுமைக்கு எதிராக எழுந்து போராட வேண்டும். சீதனப் பிரச்சினையை ஒட்டுமொத்தமாகத் தீர்த்து வைக்கக் கூடிய சமுதாய விடுதலைப் போராட்டத்தில் தம்மையும் இணைத்துக் கொள்ள வேண்டும். அந்தப் போராட்டத்தின் குரலாகவே கவிதைகளும் அமைய வேண்டும். சீதனக் கொடுமைகளை இளைஞர்களிடமும், பெண்களிடமும் உணர்த்தி அவர்களை விழிப்படையச் செய்ய வேண்டும். இதன் மூலமே 'யார் வாழ்வளிக்கப் போகிறீர்கள்?' என்ற கேள்விக்கு விடைகாண முடியும். இவ்வாறான கவிதைக்கு நமது ஈழத்துக் கவிஞர் சேரனின் 'சரசா.. எனதருமைச் சரசா' என்ற கவிதையை உதாரணம் காட்ட விரும்புகிறேன். இதை விடுத்து ஆக்கிரமிக்க வந்த எதிரியிடம் போய் சரணடைவதும், அவர்களையே காதலனாக (கணவனாக) ஏற்பதும் முழுச் சமுதாயத்திற்கே இழைக்கும் துரோகமாகும். இது சமுதாயத்தில் தலைவிரித்தாடும் சீதனம் என்ற நெருப்புக்குப் பயந்து அதைவிட மோசமான பாழுங் கிணற்றில் விழுந்த கதையாகவே முடியும். இந் நிகழ்வானது நமது போராட்டத்தையே கொச்சைப்படுத்தி சமுதாயத்தையே சீரழிவில் கொண்டுபோய் விடும். இவ்வாறான ஆக்கிரமிப்பு நடந்த நாடுகளையும், அங்கு இடம் பெற்ற சீரழிவுகளையும் நாம் மறந்துவிடக் கூடாது. சீதனப் பிரச்சினையை முன்பகுதியில் அழகாகச் சொல்லும் கவிஞர் பின்பகுதியில் அதற்கான தீர்வாக சீரழிவையும் அழகாக நியாயப்படுத்தி விடுகிறார். போதாக் குறைக்கு அவர்களை சீதை, கண்ணகி என்று சம்பந்தமில்லாமல் வர்ணிக்கிறார். இது பற்றி அவர் சரியாகச் சிந்திக்க வேண்டும்.

அவருடன் காணப்படும் திறமையான, பிரச்சினைகளை அழகாக கவிநயத்துடன் வெளிப்படுத்தும் தன்மையுடன் கூடவே பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கான சரியான பார்வையையும் வளர்த்துக் கொள்வாராயின் அது வரவேற்கக் கூடிய விடயமே.

அடுத்தாக இதனையும், இவை போன்ற ஆக்கங்களையும் வெளியிடும் பத்திரிகைக் குழு கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டிய விடயம் என்னவெனில்- நான் முன்பே குறிப்பிட்டபடி 'பொறுப்புணர்வு' என்ற அடிப்படையில் இக் கவிதையைப் பிரசுரித்ததில் ஆசிரியர் குழுவுக்கும் பங்குண்டு. ஒரு வெகுசனப் பத்திரிகைக்கு உயர்வான இலட்சியமும், சரியான பார்வையும் இருப்பது அவசியம். ஆக்கதாரர்கள் தரும் ஆக்கங்களை தமது இலக்குக்கும், பார்வைக்கும் உட்படுத்திப் பார்த்துப் பிரசுரிப்பதே சிறந்த முறையாகும். இப்படியான ஆக்கங்களை எந்தவித விமர்சனப் பார்வையுமின்றிப் பிரசுரிக்கும் போக்கானது தூண்டிலுக்கு சரியான இலட்சியமோ, பார்வையோ கிடையாது என்ற சந்தேகத்தைத்தான் வாசகர் மனதில் உண்டு பண்ணுகிறது. இவ்வாறான தவறுகள் தொடர்ந்தும் நிகழுமாயின் இது ஒரு மூன்றுந்தரப் பத்திரிகையாகிவிடும் என்ற அச்சமும் என் போன்ற வாசகர்களுக்கு உண்டு. இதைப் போலவே ஏனைய ஆக்கங்களையும் என்னால் உதாரணம் காட்ட முடியும். இனிவரும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காலங்களில் இவ்வாறன தவறுகளைத் தவிர்த்து முற்போக்கு எண்ணங்களை வாசகர்கள் மனதில் தூண்டுவீர்களென நம்புகின்றேன்.

ஒரு சஞ்சிகை வளர்ச்சியில் விமர்சனமானது அதனது படிக்கற்கள் என்ற அடிப்படையில் எனது விமர்சனத்தை ஆரோக்கியமாக முகம் கொடுப்பீர்களென நம்புகிறேன்.

தூண்டில் ஒரு முற்போக்குச் சஞ்சிகையா? அல்லது .....

பேர்ன் (சுவிஸ்) எஸ். பி. மூர்த்தி

கவிதையை பற்றிய உங்கள் விமர்சனத்திற்கு அம்பலவன் புவனேந்திரன் அடுத்த கலத்தில் பதிலளிப்பாரென எதிர் பார்க்கிறோம்.

சீதனப் பிரச்சினைக்கு சமுதாய விடுதலைப் போராட்டத்தின் மூலமே தீர்வு காணப்பட வேண்டும் என்பது மறுக்க முடியாத உண்மை. நீங்கள் விமர்சித்துள்ள 'தீயின் வார்ப்புகள்' என்ற கவிதை எங்களைப் போலவே அந்நியநாடுகளிலிருப்பவர்களுக்கு, ஈழத்திலுள்ள பெண்களில் மிகச் சிலர் எப்படியான 'தீர்வை'த் தேடிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை தெரிய வைக்கும் நோக்கிலும், அப்படி அவர்கள் நடந்து கொள்வதற்கான காரணங்கள் எவை என சிந்திக்க வைக்கும் நோக்கிலுமே பிரசுரிக்கப்பட்டது. இப் பிரச்சினைக்கு உடனடித் தீர்வாக எதையும் எம்மால் தீர்மானிக்க முடியாதிருந்ததாலும், மேற்படி நோக்கங்களுக்காகவுமே நாளைய நோக்கு அக் கவிதையில் காணப்படவில்லை எனத் தெரிந்தும் பிரசுரித்தோம்.

தூண்டிலில் வெளிவரும் ஏனைய ஆக்கங்களையும் தவறானவை என உதாரணம் காட்ட முடியுமென்று குறிப்பிட்டுள்ளீர்கள். அவற்றையும் நீங்கள் விமர்சிப்பீர்களென எதிர்பார்க்கிறோம்.

— கடலோடிகள்.

மனிதம் எங்கே? ஆசிரியர் தலையங்கம் உண்மையில் வரையப்பட வேண்டிய கட்டுரைதான். இப்படியெல்லாம் தலையங்கம் தீட்டி தூண்டில் தன்னை வித்தியாசமாகவே காட்டுகிறது. பலர் கேட்கப் பயப்படும் கேள்விகளைக் கேட்ட தூண்டிலுக்கு என் பக்கப் பலமான வாழ்த்துகள்.

சென்ற இதழில் மயூரன் அளித்த பதிலுக்கு எனது பதில். 'வரலாறு கண்ட யுத்தங்கள் யாவும் வர்க்கங்களுக்கிடையிலான யுத்தம் என்பது மாக்ஸிஸ அணுகுமுறை என்று கார்ல்மார்க்ஸை துணைக்கழைத்துக் கொண்டு பதிலளித்தீர்கள். நன்று நண்பரே.

கார்ல்மார்க்ஸின் கோட்பாடுகள் மனித இனத்தின் பிரச்சினைகளுக்கு முடிவான



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தீர்வைச் சொல்லிவிட்டதா? மார்க்ஸின் கணிப்புகள் சரி என்று நிருபிக்கப் பட்டு விட்டனவா?

'முதலாளித்துவ அடிப்படையில் அமைந்த சமுதாய அமைப்பில் உருவாகும் எந்த ஜனநாயகமும் முடிவில் தன்னுடைய முரண்பாடுகளாலேயே சரிந்து போகும்' என்பதும் கார்ல்மார்க்ஸின் 'டஸ் கப்பிற்றல்' என்ற நூலின் சித்தாந்தம்தான். முதலாளித்துவ உலகை உற்று நோக்குங்கள்.

பாட்டாளி வர்க்கம் ஒன்றுபட்டு எழும்போது நாட்டுக்கு நாடு இடையேயுள்ள எல்லைக் கோடுகள் அழிந்து போகும் என்பதும் மார்க்ஸின் கணிப்புகளில் ஒன்றுதான். இரு கொம்யூனிச நாடுகளுக்கிடையில் மோதல்வர நியாயமில்லை என்பதும் மார்க்ஸின் கணிப்புகளில் ஒன்று. கொம்யூனிச நாடுகளான ரஷ்யாவையும், சீனாவையும் உற்று நோக்குங்கள். அங்கு எல்லையில் நிலைமை எப்படி?

மனித வரலாற்றில் மார்க்ஸிய சித்தாந்தம் செய்துள்ள மாற்றத்தை எவரும் குறைத்து மதிப்பிட முடியாது. ஆனால் அது மனித அடிப்படை பிரச்சனைகளுக்கெல்லாம் முடிவு கூறிவிட்டதா திரு மயூரன் அவர்களே?

இவற்றையெல்லாம் காரணம் காட்டி வர்க்க முரண்பாட்டை நான் மறைக்கவில்லை. சிங்களப் பேரினவாதமும், புத்தமத மறுமலர்ச்சியும் தேசிய எழுச்சியின் பிரதிபலிப்பு என வரலாற்று ஆசிரியர்கள் கூறுகிறார்கள். ஆனால் அவர்களின் தவறான பார்வை போல் நானும் பார்க்கவில்லை. தேசிய உணர்வு சிறுபான்மையினருக்கெதிரான வகுப்பு வாதமாகியது என்பதையும் நான் அறிவேன். புத்த மத மறுமலர்ச்சி என்பது அரசியலின் குரல் என்பதை நான் மறுக்கவில்லை. காலனியாட்சி சமூகத்தில் கிறிஸ்தவர்கள் பெற்றிருந்த வாய்ப்புகளை புத்த மதத்தவர்கள் எதிர்த்தார்கள். இதன் விளைவாகவே புத்தமத மறுமலர்ச்சி அரசியலின் குரலாகியது.

நீங்கள் கூறுவது போல் தர்மபால தனது கருத்து வெற்றியளிப்பதற்காகத் தான் சிறுபான்மையினருக்கெதிராகச் செயற்பட்டார். ஆனால் இவரின் கருத்து அடிப்படையிலேயே முஸ்லீம்-சிங்களவர் கலவரம் மூண்டதாகக் கூற முடியாது. 1915ஆம் வருடம் முதலாவது உலகப் போரினால் ஏற்பட்ட பொருட்களின் தட்டுப்பாட்டினாலும், விலையேற்றத்தினாலும் பாதிக்கப்பட்ட சிங்கள மக்கள் ஏற்கெனவே தமது சில்லறை வியாபாரத்தில் முஸ்லீம்கள், செட்டியார் சமூகங்கள் வழமையாகச் செய்து வந்த வாணிபத்துடன் போட்டி போட முடியாமல் பொறுமைப்பட்டார்கள். காரணம் சாதாரணக் கிராமங்களில் கூட வியாபாரத்தில் முஸ்லீம்கள் சிறந்து விளங்கினார்கள். இந்தத் தொழில் போட்டியால் சிங்கள குட்டி முதலாளிகள் வங்கிகளில் கடன் எடுத்துத் தம்மை முன்னுக்குக் கொண்டுவர முயன்றார்கள். ஆனால் பிறநாட்டு வங்கிகள் இவர்களுக்கு கடன் கொடுக்க முன்வரவில்லை. இதன் விளைவாக இவர்கள் தென்னிந்திய

செட்டிமாரிடமே கடன்பட நேர்ந்தது. செட்டிமார்களின் வளர்ச்சியும், முஸ்லீம்களின் வியாபார முன்னேற்றமும் நகர்ப்புறக் குட்டி முதலாளிகளை மேற்கூறியவர்களுடன் போட்டி போட வைத்தது. இந்த நிலையால் பகையுணர்வு, இனவாத எதிர்ப்புணர்வு முண்டது. இந்த வகையில் பொருளாதாரக் கஷ்டத்தால் பாதிக்கப்பட்ட சிங்கள குட்டி முதலாளித்துவம் தம் பகையுணர்வை ஏழை மக்கள் மூலம், 1915இல் ஏற்பட்ட பொருட்களின் தட்டுப்பாட்டாலும், விலையேற்றத்தாலும் முஸ்லீம் மக்களின் வியாபார ஸ்தலங்களை சேர்ந்தழித்தார்கள். இது வர்க்க அடிப்படைதான். இது கூடவா எமக்குப் புரியாது?

ஐரோப்பியரால் பரப்பப்பட்ட 'ஆரியர்' என்ற கருத்து சிங்கள மக்கள் மத்தியில் எடுபடாமல் போனதற்குக் காரணமும் கூறுகிறீர்கள். ஆரியர் என்ற கருத்தியல் எடுபடவில்லையென்று கூறுகிறீர்களே, உண்மையில் இது சரிதானா? ஐரோப்பியர் ஆண்டு கொண்டு 'ஆரியர்' என்ற கருத்தியலை சிங்கள மக்களுக்கு ஊட்ட முனைவது அவர்களுக்கே ஆபத்து என்று கூறுகிறீர்கள். இது உங்களுடைய 'சக்கையான' பார்வையைப் புலப்படுத்துகிறது. (சக்கையான பார்வை உபயம் நீங்களே)

பதினெட்டாம், பத்தொன்பதாம் நூற்றாண்டில் சமஸ்கிருத மொழியைக் கற்ற ஐரோப்பிய மொழியாராட்சியாளர்கள் ஐரோப்பிய மொழிக்கும் இம்மொழிக்கும் தொடர்பு இருப்பதாகக் கூறினர். இக் கண்டுபிடிப்பு பல விளைவுகளைத் தோற்றுவித்தது. ஆரியர்கள் அதே மொழியைப் பேசியவர்கள் என்று நோக்காது 'ஆரியர்' என்பது தனி இனம் என்றே நோக்கப்பட்டது. இந்தியாவின் இந்துமத மறுமலர்ச்சியாளர் பண்டைய இந்தியர் உயர்ந்த சமூகத்தவர் என்ற பொற்காலக் கோட்பாட்டைக் கொண்டு, இந்தியப் பண்பாட்டுக்கு வேதாந்தக் கலாச்சாரமே அடிப்படை எனக் கூறினர். ஆரியர்கள் நாகரிம் படைத்தவர்கள் எனவும், பண்டைய இந்த நாகரிகத்தின் வழிவந்தவர்கள் என்பதை வரலாற்று உண்மையாகவும் கூற முன் வந்தனர். சிங்கள முதலாளிகளும், குட்டி முதலாளிகளும் தென்னிந்திய திராவிட இனத்தவரான தமிழர்களிலும் பார்க்க தாம் வட இந்திய ஆரிய இனத்தைச் சார்ந்தவர்கள் என உறுதியாக நம்பினார்கள்.

ஆரியர் என்ற பொய்மைக் கோட்பாடு 18ஆம் நூற்றாண்டின் மறுமலர்ச்சிக் காலத்தில் ஐரோப்பாவில் தோன்றிய ஒன்று. பைபிளில் கூறப்பட்ட பூதக்கதைகளின் கிறிஸ்தவ ஆதிக்கத்தை எதிர்த்து 'புதிய ஆதாம்' என்ற கருத்து முன் வைக்கப்பட்ட காலமாகும். கிழக்கிலிருந்து தெய்வ ஒளி வந்ததென்றும் மனித இனம் இந்தியாவில் தோன்றியதென்றும் இவர்களால் முன் வைக்கப்பட்டது. இவ் வாரியக் கோட்பாடு காலனியாதிக்கத்துக்குட்பட்ட மக்களுக்கும் ஐரோப்பிய ஆட்சியாளருக்கும் உறவிருந்தது என்று கூறியது. இக் கோட்பாடு தெற்காசிய காலனியாதிக்கத்துக்குட்பட்ட மக்கள் உயர்ந்த நிலையில்

www.tamilarangam.net

இருந்தவர்கள் என்ற கோட்பாட்டை நிறுவி அந்நிய ஆட்சியாளருக்கு உறவினர் எனவும் உயர்த்தி, ஐரோப்பியன் இந்தியா, இலங்கை போன்ற நாடுகளிலுள்ள மக்களின் கூடிய தொகையை தன் பக்கம் பிரித்து வைத்துக் கொண்டு நாட்டை ஆண்டான்.

நாட்டின் பெருந்தொகையான மக்களை தன் குடும்பத்தவன் என்று கூறிக் கொண்டு நாட்டைச் சுரண்டினான் வெள்ளைக்காரன். இந்தப் பிரித்தாளும் தந்திரத்தை 'சக்கையான' பார்வையில்லாத நீங்கள் அறியாதது ஏன்? அடுத்து வர்ண இன வெறி ஏற்படவில்லை என்று கூறியுள்ளீர்கள். ஆரியர், திராவிடர் என்பது 'வர்ண' தர்மத்துக்குள் அடங்கவில்லை. வர்ண முறை 'தொழில்' பிரிவுகளைக் காட்டுவது. எனவே இதை 'வர்ண' என்று போட்டு அழைப்பது சரியல்ல.

'குறுந்தேசிய வெறியும் தொடர்ச்சியாக வளர்த்தெடுக்கப்படவில்லை என்பதை தமிழரை இலங்கையில் தலைவராகத் தெரிந்து பல்லக்கில் சிங்கள மக்கள் தூக்கியதிலிருந்து அறிந்து கொள்ளலாம்'. ஆகா, நல்ல விளக்கம். உங்கள் அடிப்படை ஞானம் புரிகிறது. இதை வைத்து குறுந்தேசிய வெறி இல்லை அல்லது வளரவில்லை என்பீராகில் இதுவும் உம்முடைய 'சக்கையான பார்வை' இல்லாத நோக்கில் சரிதான்.

சிறு உற்பத்தியாளர், சிறிய வியாபாரிகள், நகர்புறக் குமாஸ்தாக்கள் ஆகிய சிங்கள குட்டி முதலாளித்துவ உணர்வு கொண்டவர்களிடம் ஆரியர் என்ற கருத்தியலில் இன்றும் கூட நம்பிக்கையுள்ளது. இந்தக் கருத்தோடு 'இனத் துவேசமும்' ஒருங்கே வடிவம் பெற்று சிறுபான்மை மக்களுக்கெதிராக பகையுணர்வு கொண்டுள்ளது. மற்றப்படி ஆளும் வர்க்கத்திற்குச் சேவை செய்யும் அரசு இவற்றைத் தூண்டிவிட்டு வர்க்கப் போராட்டத்தை நசுக்குவது என்பது சராசரி மனிதனுக்கும் தெரிந்த விடயம்.

சமுதாயத்திலுள்ள முரண்பாடுகளின் வர்க்க அடிப்படையை ஆராய்ந்து அடிப்படைப் போராட்டத்தையும், முரண்பாடுகளையும் அறிய வேண்டும் என எனக்கு நீங்கள் கூறுவது உங்களைவிடப் புத்திசாலிகள் தமிழ்ச் சமுதாயத்தில் இல்லை என்ற ஆணவப் போக்கா என்ன?

ஆய்வு, திரிபுவாதம் என்ற சொற் பிரயோகம் மூலம் என் 'சக்கை' பார்வையை மறைக்க வேண்டியதில்லை நண்பரே. நான் எழுதிய விமர்சனத்தை ஒழுங்காக அறிய முடியவில்லையாயின் மீண்டும் ஒருமுறை படித்துப் பாரும். வர்க்க பேதத்துக்கு மட்டும் இனத்துவேசம் பரப்பப்படவில்லை என்றுதான் எழுதியுள்ளேன். இதன் உள் அர்த்தம் என்னவென்று தெரியாமல் குழம்புகிறீர். 'இனத் துவேசம் பன்மடங்கு வளர சிங்கள அரசு துணை புரிந்தது' இதைக் கூடவா உம்மால் புரிய முடியவில்லை. 'சிங்கள அரசு' துணை புரிந்தது என் பதிலேயே நீர் சொன்ன வர்க்க அடிப்படை அதாவது இன ஒடுக்கு முறையில்

www.tamilarangam.net

வர்க்க அடிப்படை இதுவே என்ற கூற்றுக்குப் பதிலுண்டு நண்பரே.

ஒரும் தரகு முதலாளித்துவ வர்க்கத்திற்கும், குட்டி முதலாளித்துவத்துக்கும் உள்ள முரண்பாட்டைத் தவிர்க்க மட்டுமே இனத் துவேசக் கொள்கையை அரசு கடைப்பிடிப்பதாக நீர் உணருவீராகில் அது தவறான எண்ணம் என்பதை காலப் போக்கில் புரிந்து கொள்வீர்.

கார்ல்மார்க்ஸின் கொள்கைகள் பல அவர் வாழ்ந்த காலத்திற்குச் சரியானவையாக இருக்கலாம். அதை அப்படியே மெல்லாமல், செரிக்காமல் 'கக்கி' வைக்கும் நவீன மார்க்ஸிட்டுகள் ஒன்றை மட்டும் புரிந்து கொள்ள வேண்டும். அவரின் கருத்துகள் பல தற்காலத்தில் புதைகுழியை நோக்கிப் புறப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

நா றன்பேர்க் ப.வி. சிறீரங்கன்

ஒக்ரோபர் மாத தூண்டிலில் வெளியான 'மனிதம் எங்கே?' என்ற கட்டுரையானது வர்க்கக் கண்ணோட்டம் எதுவுமற்ற ஓர் கதம்பக் கோவையாக அமைந்துள்ளது. இன்றைய உலகமே வர்க்கப் போராட்டத்தினுல் பிளவுபட்டிருக்கும் வேளையில் எந்த ஒரு வர்க்கத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தாத, சமூகத்தினது வர்க்க உணர்வுகளைத் தட்டியெழுப்பாத இடைநிலைவாத நோக்குகள் அனைத்தும் கதம்பக் கோர்வையிலேயே சேரும். வெகுஜனப் பத்திரிகை என்பது சமூகத்தில் நிலவும் நிகழ்வுப் போக்குகளை சித்தரித்துக் காட்டுகிறது. இது முதலாளித்துவ சமூகத்தில் அவ்வர்க்கத்தின் (வர்க்கும்) நலனைப் பிரதிநிதித்துவப்படுத்தி அவ்வமைப்பு முறையைப் பாதுகாக்க நிகழ்வுகளைத் திரித்துப் புரட்டி, அதன் சமூக விஞ்ஞானக் கண்ணோட்டத்தை அகற்றிவிட்டு கருத்துகளை வெளியிடுகிறது. அரிதாக சில உண்மைகள் வெளியிடப்படினும் அது முதலாளித்துவத்தின் நலன் கருதியதாகவே இருக்கும். ஆனல் சோசலிஸ சமூகத்தில் ஒடுக்கப்பட்டு வந்த வர்க்கத்தின் நலனைப் பேணவும், வர்க்கங்களற்ற கொம்யூனிஸ சமுதாயத்தைப் படைக்கவும் நிகழ்வுகளை யதார்த்தமான நிலையில் சமூக விஞ்ஞானக் கண்ணோட்டத்தின் அடிப்படையில் செய்திகளை வெளியிடுகிறது. இவ்விருவகை வெகுஜனப் பத்திரிகைகளையும் எவரும் இலகுவில் இனம் கண்டு செயற்பட முடியும். ஆனல் இவையெதுவுமின்றி, வர்க்கப் பகைமையின் நடுவே இதமான சுகம் காணும் கதம்பக் கோர்வைகள் ஒருபோதும் சுரண்டப்படும் வர்க்கத்தின் நலன்களுக்காக துணை நிற்பதில்லை. ஏனெனில் இது சமூகம் வர்க்க ரீதியாகச் சிந்தித்து உணர்மையடைந்து தனது எதிரியையும், தனது தோழனையும் இனம் காணுவதற்குத் தடையாய், தன் முன்னுள்ள கடமையைச் சிந்திக்க முடியாதவாறு செய்துவிடுகிறது.

ஈழத் தமிழர்களது சுயநிர்ணய உரிமைப் போராட்டம் எவ்வாறு உருப்பெற்றது? அதற்கு அடித் தளமாய் அமைவது என்ன? அது வெற்றி பெறச் செய்ய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வேண்டியது என்ன? என்பதனைக் கண்டறியாது தனித்துச் சம்பவங்களை மட்டும் வெளியிடுவது அர்த்தமற்றது. தமிழ் மக்களது சுயநிர்ணய உரிமைக்காகப் போராடிய குட்டி முதலாளித்துவ இயக்கங்கள் அனைத்தும் கடந்த 29 ஜூலை 87லிருந்து அம் மக்களது உரிமைப் போராட்டத்தை (அடகு வைத்து) கைவிட்டு, அவர்களை அடக்கியொடுக்குவதற்கான அடக்குமுறை இயந்திரங்களாக மாறிவிட்டன. எனவே முதலாளித்துவத்துடன் ஒன்றித்தவர்களை இன்றும் கூட விடுதலைக்காகப் போராடுவோர் என்ற அடிப்படையில் விமர்சிப்பது தங்களது கனவுநிலை எதிர்பார்ப்பே. இக் கட்டுரை அமைப்பானது விடுதலைப்போராட்டத்தில் ஈடுபட்டு விரக்தியுற்று, ஒதுங்கியிருப்போர் மத்தியிலும், துரோகம் புரிந்தோருக்கு துணைபுரிந்துகொண்டிருக்கும் உண்மையற்றோர் உண்மைப்படவும் வழி வகுக்கவில்லை. ஏனெனில் தலைமைகளதும், அதோடு கூடியிருப்பவர்களதும் துரோகத்தினால் நிலமைகளை புரிய முடியாது தமது உழைப்புகளை வழங்குவோரது உணர்வுகளைத் தட்டியெழுப்பக் கூடிய வகையில் எழுத்துகள் அமைய வேண்டும்.

அடுத்த கட்டமாக என்ன செய்ய வேண்டும் என்பது பற்றிய சரியான தீர்வை வைக்காத 'தொடரப் போகும் போராட்டத்திற்கு எம்மைத் தயார் படுத்துவோம்' என்பது இருக்கும் ஊசலாட்ட உணர்மையற்ற போக்குகளை கூட்டவே செய்யும். இன்று பெரும்பாலோரது நிலை இதுவேதான். கடந்த காலத் தவறுகளை விமர்சனப்படுத்துவதுடன் நின்றுவிடுகின்றனரேயன்றி அடுத்த கட்டம் பற்றிச் சிந்திப்பது கிடையாது. இவ்வாதத்துள் கடந்த காலத்தில் போராட்டத்தில் நாட்டமற்று இருந்தோர் கூட இன்று மேதாவிகளாகவும், தீர்க்க தரிசனவாதிகளாகவும் மாறி போராட்டம் எப்படி மாறும் என்பது முற்கூட்டியே தெரியும் எனக் குறிப்புக் கூறுவோராயே உள்ளனர். எனவே கடந்தகால நிகழ்வுகள், தவறுகளை முன்வைத்து எதிர்காலத்திற்காக நாம் இன்று என்ன செய்ய வேண்டும் என்பதை முன் வைப்பதன் மூலமே வர்க்க நனவுடைய (சுரண்டப்படும் வர்க்கத்தின்) சக்திகளை இனம் காண முடியும்.

தனிச் சொத்துடைமையைப் பேண உச்சக்கட்டச் சுரண்டலை மேற்கொள்ளும் முதலாளித்துவ வர்க்கத்தையும், அதன் ஏகாதிபத்திய பின் புலத்தையும் அடித்து நொறுக்கி சுரண்டப்படும் வர்க்கத்தினது நலனைப் பேணும் சோசலிச சமூகத்தைப் படைப்பதன் மூலமே மனிதத்தைக் காண முடியும். ஏனெனில் அதுவே வர்க்கங்களற்ற கொம்யூனிச சமுதாயத்திற்கு இட்டுச் செல்கிறது. அங்குதான் மனிதம், சமாதானம், அமைதி காண முடியும். அதை விடுத்து இன்றைய நிலையில் மனிதம் எங்கே என்று தேடுவது சுரண்டும் வர்க்கத்தை அடக்கியொடுக்க வேண்டிய சுரண்டப்படும் வர்க்கத்தின் கடமைகளைமறக்கச் செய்ய முயல்வதாகும். சுரண்டப்படும் வர்க்கம் கூட சுரண்டும் வர்க்கத்தை அடக்கியொடுக்கும்போது இன்று ஈழத்தில் காண்பதைவிட கொடிய சூழ்நிலையே நிலவும். அந்த நிலையில் மனிதம் பார்க்க முடியுமா? எனவே மனிதம் எங்கே? எப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போது வரும்? அதை எவ்வாறு பெறுவது? என்றில்லாமல் இன்றே அதைத்தேட முயல்வது அதைப் பெற முயல்வதற்கே தடையாகிவிடுகிறது. இத்தகைய நிலமையை ஐரோப்பிய நாடுகளில் வசிக்கும் நாம் கண்டு அனுபவிக்கின்றோம். கிட்லரின் தேசிய வாதத்தில் எழுந்த இரண்டாவது உலகமகா யுத்தம் இம் மக்களை சமாதான விரும்பிகளாக மாற்றிவிட்டது. ஆயுதம் தூக்குவதே பயங்கரவாதம்தான் என்ற உணர்வுதான் காணப்படுகிறது. இதனால் முதலாளித்துவத்தைத் தோற்கடிக்க முடியாது. அமைதி வழிப் போராட்டத்தைத் தேடுகின்றனர். இதே நிலை கடந்தகால விடுதலை இயக்கங்களினது துரோகத்தனத்தால் அடுத்து என்ன செய்வது என்று தெரியாது நிற்கும் ஈழ மக்களிடமும் ஏற்படினும் அங்கு ஏகாதிபத்தியம் நிலைகொண்டு விடும். அம் மக்களும் ஆயுதமேந்தி உள்நாட்டு எழுச்சி மூலமே சோசலிசம் மலரும், மனிதம் கிட்டும் என்பதனை மறந்து அமைதி வழியை நாடி ஏகாதிபத்தியத்தினால் நசுக்கப்படுவார்கள். எனவே வர்க்கக் கண்ணோட்டத்திலான ஆய்வை முன்வைத்து சுரண்டப்படும் வர்க்கத்தின் விடுதலைக்கான வெகுஜனப் பத்திரிகையாகத் தூண்டிலை போடுங்கள்.

கெல்ஸ்—விக்கென்றுட எஸ். பிடல்

வர்க்கப் பகைமையின் நடுவே இதமான சுகம் காண்பதற்காக 'மனிதம் எங்கே?' என்று எழுதவில்லை. நாம் இன்னும் ஆரம்பக் கட்டத்திலேயே இருக்கின்றோம். இதனாலேயும், எங்களுடைய மட்டத்தில் இருப்பவர்களுக்காகவுமே அந்தக் கட்டுரை அப்படியான அமைப்பில் இருந்தது. குறிப்பிட்ட சொற் பதங்களை அறிந்த விசயம் தெரிந்தவர்கள் மட்டுமே புரிந்து கொள்ளக் கூடியதாக இல்லாமல் அனைவருமே புரிந்து கொள்ளக் கூடிய வகையில் எளிமையான முறையில் எழுத விரும்புவதுடன், நாங்கள் தெரிந்து கொள்ள வேண்டியவை இன்னும் இருக்கின்றன என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

— கடலோடிகள்

தூண்டில் என்ன இலங்கையில் தமிழ்ப் பகுதியில் உள்ள சமூக விரோத இயக்கங்களின் தூதுவனா? இந்தியப் பத்திரிகையான 'புதிய ஜனயுகம்' போன்ற தரம் கெட்ட விமர்சனங்களை மறு பதிப்பிட்டு தமிழ் மக்களைப் புண்படுத்த வேண்டாம் எனத் தூண்டில் வாசகன் என்ற முறையில் வேண்டுகிறேன்.

பொன் எஸ். கலியுகன்

எமக்குக் கிடைக்கும் செய்திகளை மற்றவர்களுக்காகவும் வெளியிடுவது சமூக விரோதிகளுக்குத் துணை போவதும், மனதைப் புண்படுத்துவதுமாகாது.

— கடலோடிகள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# விலைமகன்

கல்யாணி

சித்திரத்தில் பெண்ணெழுதி சீர்ப்படுத்தும் ஆணினமே
சீவனுள்ள பெண்ணினத்தை வாழவிட மாட்டாயா?
சித்திரப் பாவையவள் சிங்காரக் கனவுகளை
சீதனத்தை நீ கேட்டே சிதைத்தே புதைக்கலாமா?

பொருளாதாரமா நீ காரணமாய் கூறுவது
பொருளதனை நீ தேட தாரமதாய் அவள் வருவாள்
பெருமைகளும் சேர்ந்திடுமே பெண்மைகளும் மலர்ந்திடுமே
பெரிய இக்கொடுமை தானாக மறைந்திடுமே.

பெற்றோர்கள் பெருந்தொல்லை இதைப்பற்றியானறியேன் என்று
பெரியோர்கள் அவர்தலையில் பழியிதனைப் போடலாமா?
கற்றவர்கள் கல்விமான்கள் கடல் கடந்த அனைவருமே
கருத்துடனே கேட்கின்றனர் கேடுகெட்ட இச் சீதனத்தை.

கல்யாணச்சந்தையிலே கடைவிரிக்கும் காளையரே
காசதனை வீசிவிட்டு காளையுனை வாங்கிவிட்டால் -
காலமெலாம் காரிகையின் அடிமையன்றோ உன் வாழ்வு
கடுகளவும் இதை எண்ணவில்லை கோழையான காளையரே.

பள்ளியிலே கல்வியள்ளி பாராளும் தகுதி பெற்ற -
பாராண்ட பதுமைகளை பாரினில் நீ காணலையோ?
அள்ளிமுடித்த கூந்தலோடு அலுவலகங்கள் பலதன்னில்
அழகாகப் பவனிவரும் அவளையும் நீ காணலையோ?

கஸ்ரங்கள் அனைகடக்க காசதனை வாங்கிவிட்டு
காரிகை தனை விற்றால் அவள் பெயர் விலைமகளாம்.
காசதனை கௌரவமாய், கட்டுக்கட்டாய் வாங்கிவிட்டு
காளையுனை நீ விற்றால் உன் பெயர் மணமகனோ...?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




பிந்திய செய்தி (சூட் டொச்ச சைற்றங், பிராங்பேர்ட்டர் றன்ட்சோ)

3.11.88 வியாழக் கிழமை அதிகாலையில் மாலைதீவின் தலைநகரமான மாலியில் திடீர்த் தாக்குதல் நடத்தப்பட்டது.இலங்கையிலிருந்தே படகுகள் வந்ததாகவும், அவற்றில் வந்து தாக்குதல் நடாத்திய ஆயுதபாணிகள் தமிழ் பேசியதாகவும் ஊர்ஜிதமற்ற தகவல்கள் தெரிவிக்கின்றன.இத் திடீர்த் தாக்குதல் தற்போது சிங்கப்பூரில் தங்கியிருக்கும் முன்னாள் மாலைதீவு ஜனாதிபதி நசீருக்கு ஆதரவாக, அவருடைய கட்சி ஆதரவாளரும், கொழும்பில் தங்கியிருக்கும் வியாபாரியான அப்துல்லாவாலேயே இத்தாக்குதல் ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக நம்பப்படுகிறது.மாலியில் பிரவேசித்த ஆயுதபாணிகள் வானொலி நிலையத்தை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததுடன் ஜனாதிபதி மாளிகையையும் கைப்பற்றி 27 பேரை பணயக் கைதிகளாகச் சிறை வைத்தனர்.இந்தத் தாக்குதல்களின் போது 100-150 பேர் வரை கொல்லப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது.மாலைதீவின் தற்போதைய ஜனாதிபதி(மூன்று முறை தனது ஆட்சிக் காலத்தை நீடித்துக் கொண்டவர்) கையூம் அவசர உதவி கோரி இந்தியா, அமெரிக்கா, இங்கிலாந்து, பாகிஸ்தான், இலங்கை ஆகிய நாடுகளுக்கு விண்ணப்பித்தார்.வியாழன் மாலை 1,600 இந்திய விமானப்படைத் துருப்புகள் மாலியில் தரையிறங்கி, தமது தாக்குதலை ஆரம்பித்தன.ஞாயிற்றுக் கிழமை மாலியிலிருந்து இலங்கை இருக்கும் திசை நோக்கிப் புறப்பட்ட கப்பலை இந்திய யுத்தக் கப்பல்கள் இடைமறித்துத் தாக்கியதில் கப்பலில் கொண்டு செல்லப்பட்டுக் கொண்டிருந்த பணயக்கைதிகளில் நால்வர் கொல்லப்பட்டனர்.மாலைதீவு போக்குவரத்து அமைச்சர் உட்பட ஏனைய பணயக்கைதிகள் விடுவிக்கப்பட்டதுடன் தமிழ் பேசிய ஆயுதபாணிகள் 46பேர் கைது செய்யப்பட்டனர்.இவர்களுடன் தாக்குதலை ஏற்பாடு செய்த அப்துல்லாவும் கைது செய்யப்பட்டுள்ளதாக ஊர்ஜிதமற்ற தகவல்கள் தெரிவிக்கின்றன.

24.9.88 (வீரகேசரி)

சில இடங்களில் தென்னிலங்கைத் தீவிரவாதிகள் இராணுவ, பொலிஸ் நிலையங்கள் மீது தாக்குதல் மேற்கொண்டதையடுத்து நாடெங்கும் பாதுகாப்புப்படையினர் உசார்ப்படுத்தப்பட்டுள்ளனர்.

காலி-எல அக்குரஸ்ஸ உட்பட ஐந்து இடங்களில் பொலிஸ், இராணுவம் மீது அடுத்தடுத்து தாக்குதல்கள் இடம்பெற்றதில் ஐவர் மரணமடைந்தனர். 13 பேர் காயமடைந்தனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆகஸ்ட் 16ம் திகதி முதல் இம்மாசம்(செப்டம்பர்)15ம் திகதிவரையிலான ஒரு மாத காலத்திற்குள் வடக்குக் கிழக்கில் 62 பொதுமக்களும் 9 பொலிசாரும் 10 படைவீரர்களும் கொல்லப்பட்டனர். தெற்கில் 51 அரசியற் கொலைகளும் 99 ஏனைய கொலைகளும் இடம்பெற்றுள்ளன—பொது நிர்வாக அமைச்சர்.

ஜனநாயக அரசியற்பொது வாழ்வில் ஈடுபடக்கூடிய வகையில் எம்மையும், இதுவரை விடுதலை செய்யப்படாத தமிழ்பேசும் அரசியற் கைதிகளையும் உடனடியாக விடுதலை செய்யுமாறு மன்றாடுகிறோம். இந்த மன்றாட்டம் புறக்கணிக்கப்படுமானால் செப்டம்பர் 30ம் திகதியிலிருந்து சாகும்வரை உண்ணாவிரதமிருக்க உறுதிபூண்டுள்ளோம். இவ்வாறான மகஜர் ஒன்றை பூஸா முகாமிலுள்ள தமிழ்க் கைதிகள் ஜனாதிபதிக்கும், இந்திய பிரதமருக்கும் அனுப்பி வைத்துள்ளனர். இதில் வேடிக்கை என்னவென்றால் யாரைக் காட்டிக்கொடுக்கவில்லையென்பதற்காக தடுத்துவைக்கப்பட்டுத் தண்டனை அனுபவிக்கிறோமோ அவர்களே விடுதலையாகும்போது நாம்மட்டும் விரக்தியின் விளிம்பில் தொடர்ந்தும் சிறைப்பட்டு வாடுவதே. இவ்வாறும் மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கண்டி ரங்கல்ல பொலிஸ் பிரிவில் எம்.பி. அபேரத்ன என்பவரும், வீரகெட்டியா சர்வோதய நிலையத்தில் வைத்து டபிள்யூ.ஏ. கீர்த்தி என்பவரும், கிஸ்குராங்கொடையில் டபிள்யூ. சந்திரசிறி என்பவரும் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

## 27.9.88 (வீரகேசரி)

புனர்வாழ்வு, புனர்நிர்மாண அமைச்சரும் குளியாப்பிட்டிய எம்.பியுமான திரு. லயனல் ஜயதிலக 26.9.88 அன்று சுட்டுக்கொல்லப்பட்டார்.

மகரகம ஜாதிக சேவக சங்கமய கிளைச்செயலாளர் சேனவீரவும், அவரது சகோதரரும் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

## 28.9.88 (வீரகேசரி)

தாளையடிப் பகுதியில் மீன் பிடிக்கச்சென்ற எஸ். உதயகுமார், எஸ். யோகராசா ஆகிய இருவரும் காணமற்போயுள்ளனர்.

கொழும்பு புறக்கோட்டை செட்டியார் தெருவில் கொல்லப்பட்ட இளைஞர் அளவெட்டி தெற்கைச் சேர்ந்த வேலாயுதன் திவாகரன் என அடையாளம் காணப்பட்டுள்ளா

இந்திய இராணுவத்தை வெளியேற்று. இலங்கை—இந்திய ஒப்பந்தத்தை கிழித்தெறிந்து யுத்த நிறுத்தத்தையும், சமாதானத்தையும் நிலைபெறச்செய், மாகாணசபைத் தேர்தல் நடாத்தாதே, போன்ற சுலோகங்களுடன் கொழும்பில் பிக்குமார்கள் அரச எதிர்ப்பு பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

## 29.9.88 (வீரகேசரி)

மாத்தளை, காலிப்பகுதியில் மாணவர்களின் ஆர்ப்பாட்டங்கள் காரணமாக பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன.

www.tamilarangam.net

மட்டக்களப்பு கிரானுக்குத் தெற்கே முன்பு தீவிரவாதிகளால் கடத்தப்பட்ட சுந்தரராஜபிள்ளை என்பவரது சடலம் கண்டெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்டுள்ள தனியார் மருத்துவக்கல்லூரிக்கெதிராக கண்டனப்போராட்டம் நடத்த முயலும் யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் மீது புலிகள் இயக்கத்தினர் அடக்குமுறையைக் கையாண்டு வருகின்றனர். புலிகள் இயக்கத்தினருக்கு அரசியல், பொருளாதார சித்தாந்தங்கள் இல்லையென தேசிய மாணவர் நிலையம் தெரிவித்துள்ளது.

இந்திய இராணுவம் தமிழ்ப்பகுதிகளைவிட்டு வெளியேறுவதையே நாம் விரும்புகிறோம். இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் தமிழ் மக்களின் நியாயபூர்வமான உரிமைகள் எதுவும் இதுவரை வழங்கப்படவில்லை. -திலீபனின் ஞாபகார்த்த மணி மண்டபத்துக்கான அடிக்கல்நாட்டு விழாவில் திரு.க.சிவஞானசுந்தரம்.

30.9.88 (வீரகேசரி)

மட்டக்களப்பு-அம்பாறை மாவட்ட எல்லைக்கிராமமான 16ம் குடியேற்றக் கிராமத்திலிருந்து 150 தமிழ்க்குடும்பங்கள் வெளியேறி மன்டூரில் தஞ்சமடைந்துள்ளன. 10.9.88 அன்று இக்குடியேற்றக் கிராமத்தில் 7 சிங்களக் குடிமக்கள் வெட்டிக் கொலைசெய்யப்பட்டதையடுத்து அதே இரவு 4 தமிழ்க் குடிமக்கள் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

01.10.88 (வீரகேசரி)

அனைத்து அரசியற் கைதிகளையும் விடுவிக்கக்கோரி பூஸா தற்காலிகச் சிறையிலுள்ள கைதிகள் மீண்டும் உண்ணாவிரதத்தை ஆரம்பித்துள்ளனர்.

கல்குடாவில் கிருஷ்ணன் என்பவர் இனந்தெரியாதோரால் வெட்டிக் கொல்லப்பட்டார்.

வாழைச்சேனைப் பகுதியில் மோகன் என்பவர் கடத்தப்பட்டுள்ளார்.

02.10.88 (வீரகேசரி)

யாழ் மந்திகை ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டிருந்த ஊழியர்களது சம்பளப்பணம் ஒரு இலட்சம் ரூபா திருடப்பட்டுள்ளது.

தம்பலகாமம் பகுதியில் செல்வநாயகம் தேவராசா, கிருஷ்ணபிள்ளை சுந்தரராஜ் ஆகிய இருவரையும் அவர்களது வீடுகளிலிருந்து புலிகள் கடத்திச் சென்று சுட்டுக் கொன்று மின் கம்பத்தில் தொங்கவிட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஓகஸ்ட் மாதம் முதல் காணாமற் போன பிரான்சிஸ் சேவியர் வெட்டுக் காயங்களுடன் மன்னாரில் சடலமாக கண்டெடுக்கப்பட்டார்.

03.10.88 (வீரகேசரி)

வடக்கு, கிழக்குப் பகுதிகளிலுள்ள சகல கச்சேரிகளும், தேர்தல் அலுவலகங்களும் மறு அறிவித்தல் வரும்வரை இயங்கக்கூடாதென புலிகள் இயக்கம் கோரியுள்ளது.

www.tamilarangam.net

பருவான்கரையைச் சேர்ந்த வள்ளிப்பிள்ளை, பாக்கியலெட்சுமி என்ற தாயும், மகளும் இயக்கப்பகைமை காரணமாக போட்டிக்குழுவினரால் கொலைசெய்யப்பட்டு சடலங்கள் வீதியில் போடப்பட்டுள்ளன.

ஈச்சந்தீவில் முத்தலிங்கம் என்பவர் போட்டிக்குழுவால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

03.10.88 (ஐலண்ட்)

யாழ் நகரில் கிருஸ்ணபிள்ளை, இராசரெத்தினம், சுதாகரன் ஆகியோர் கொலை செய்யப்பட்டுள்ளனர். இவர்களை புலிகள் கொலை செய்திருக்கலாமென சந்தேகிக்கப்படுகிறது.

03.10.88 (டெய்லி ஒப்சேவர்)

புளொட் உறுப்பினர்களான சிறிதரன், ரூபன் ஆகியோரின் சடலங்கள் சண்டிலிப்பாய் சந்தியில் காணப்பட்டன.

மட்டக்களப்பு பிரசைகள் குழுவினரும், ஏனையோரும் கடத்திச்செல்லப்பட்ட 5 கிராம சேவகர்களையும் விடுவிக்கும்படி புலிகளைக் கோரியுள்ளனர்.

05.10.88 (ஐலண்ட்)

யாழ்ப்பாணத்தில் புலிகளால் நால்வர் கொலைசெய்யப்பட்டுள்ளனர். இவர்களில் இருவர் ஈ.பி.ஆர்.எல்.எவ் உறுப்பினர்கள்.

மட்டக்களப்பில் காளி கோவிலுக்குப் போய் திரும்பி வந்துகொண்டிருந்த தாயும், மகளும் புலிகளினால் கொல்லப்பட்டனர்.

06.10.88 (வீரகேசரி)

யாழ் குடாநாட்டுப் பகுதியில் மீண்டும் இயக்க மோதல்கள் தலைதூக்கியுள்ளன. இரண்டு தினங்களுக்குள் எட்டுப்பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

தலவாக்கலை தமிழ் மகாவித்தியாலய மாணவர்கள் நகர்ப்பகுதி காடையர்களால் தாக்கப்பட்டதை ஆட்சேபித்து இருபது தோட்டங்களைச் சேர்ந்த சுமார் 15 ஆயிரம் தோட்டத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்கின்றனர். தாக்குதலைக் கண்டித்து மாணவர்கள் வகுப்புகளைப் பகிஷ்கரிக்கின்றனர்.

மாத்தளைப் பகுதியில் தொடரும் மாணவர்களின் ஆர்ப்பாட்ட நடவடிக்கைகளினால் தொடர்ந்தும் பாடசாலைகள் அனைத்தும் ஸ்தம்பித்துள்ளன.

காலியில் அரசவிரோதச் சுவரொட்டிகள் ஒட்டினார்கள் என்ற குற்றச்சாட்டில் 4 மருத்துவபீட மாணவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காலியிலும், அநுராதபுரத்திலும் மாணவர்கள் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

www.tamilarangam.net

"இன்று ஆயிரக்கணக்கான மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்ல வாய்ப்பிருந்தும் பல்கலைக்கழகம் புகுந்து படிக்கமுடியாத வீதியில் அலைகிறார்கள். இந்த நிலை நீடித்தால் எமது நாட்டுக்கு டாக்டர்களும், எஞ்சினியர்களும் வெளிநாட்டிலிருந்துதான் கொண்டுவர நேரிடும்"-சு.க கம்பளை முன்னாள் எம்.பி.

"இன்று வடபகுதி இளைஞர்கள் ஆயுதமேந்திப் போராடுகிறார்கள் என்றால் அதற்கான முழுப்பொறுப்பையும் முன்னாள் அரசாங்கமும், இன்றைய அரசாங்கமுமே ஏற்கவேண்டும். சிறுபான்மையினர்கள் போராடுகிறார்கள் என்றால் அதற்குக் காரணம் அவர்களின் அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டதேயாகும்"-நவசமசமாஜக் கட்சி விக்கிரமபாகு

தாளம்பைக்குளத்தில் ஜவ்பர் என்ற இளைஞர் இந்திய இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டார்

## 07.10.88 (வீரகேசரி)

உடலில் அடிகாயங்களுடன் கல்லடிப் பாலத்தடியில் வாவிக்கரையில் ஈச்சந்தீவைச் சேர்ந்த ஞானசேகரம் பாஸ்கரன் என்பவரது சடலம் ஒதுங்கியுள்ளது.

பூஸா தற்காலிகச் சிறையில் உள்ள தண்டிக்கப்பட்ட அரசியற் கைதிகள் அனைவரும் சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ள 5 கைதிகளுக்கும் ஆதரவாக அடையாள உண்ணாவிரதமிருந்தனர். கைதிகளின் விடுதலையைத் துரிதப்படுத்த பொதுமக்கள் பூரண ஆதரவை வழங்கவேண்டுமென இவர்கள் கோரியுள்ளனர்.

## 07.10.88 (டெய்லி நியூஸ்)

ஊர்காவற்துறையில் ரஞ்சன், கரீம் என்ற இரு புலி உறுப்பினர்கள் இந்திய இராணுவத்தால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அக்கரைப்பற்றில் ஜெயக்குமார் என்பவர் இந்திய இராணுவத்தால் கொல்லப்பட்டார்.

## 04.10 88 (வீரகேசரி)

காலி, பதுளை, பண்டாரவளை மற்றும் தென்பகுதிப் பாடசாலைகளில் மாணவர்கள் வகுப்புகளைப் பகிஸ்கரித்து ஊர்வலம் சென்றனர்.

பருத்தித்துறையைச் சேர்ந்த தனபாலசிங்கம் சிறிதரன் என்ற வாலிபர் இனந்தெரியாதோர்களினால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

யாழ்ப்பாணம் பெருந்தெருக்கள் தொழில்நுட்ப உத்தியோகத்தரான காசிப்பிள்ளை கிருஷ்ணபிள்ளை என்பவர் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

## 05.10.88 (வீரகேசரி)

வவுனியாத் தபால் அலுவலகம் மறு அறிவித்தல் வரும்வரை இயங்கக்கூடாதென புலிகள் அறிவித்துள்ளனர்.

வாழைச்சேனையில் ஆயுதந்தாங்கிய இளைஞர்களினால் கடத்தப்பட்ட சந்திரா என்ற பெண் இந்திய இராணுவத்தினரால் மீட்கப்பட்டார்.

www.tamilarangam.net

08.10.88 (வீரகேசரி)

கல்குடாத் தொகுதியில் உள்ள கள்ளிச்சை, ஊத்தைச்சேனை, அம்புமுனை, மிராண்டாவின் புலி பாய்ந்தகல், ஆகிய பகுதிகளில் மிக நீண்டகாலமாக வாழ்ந்துவரும் தமிழ்க்குடி மக்களை வெளியேற்றி புதியவர்களைக் குடியமர்த்தும் ஆரம்ப வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வடக்கு, கிழக்கு மாகாணசபைத் தேர்தலுக்கான நியமனப்பத்திரங்கள் அம்பாறை மட்டக்களப்பு, வவுனியா, திருகோணமலை ஆகிய கச்சேரிகளில் வைத்து ஏற்கப்பட்டது. அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, யாழ்ப்பாண மாவட்டங்களில் ஈ.பி ஆர் எல் எவ் போட்டியிடுகிறது. வவுனியா, கிளிநொச்சி மாவட்டங்களில் ஈ.என்.டி எல்.எவ் போட்டியிடுகிறது. இதற்கான நியமனப்பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

ஒரு குழந்தைக்குத் தந்தையான யோசப் லூகாஸ் என்பவர் மட்டக்களப்பில் இனந்தெரியாதோரால் கடத்திச் செல்லப்பட்டுள்ளார்.

இலட்சியத்துக்காகப் போராடி பலாலி முகாமில் வைத்து மரணத்தைத் தழுவிய 12 விடுதலைப்புலிகளின் நினைவாக வல்வெட்டித்துறை மக்கள் தீருவில் மைதானத்தில் நினைவாலயம் நிர்மாணித்துள்ளனர்.

தம்பலகாமம் தென்கைச்சேர்ந்த முள்ளியடி என்னுமிடத்தில் வசிக்கும் கிருஸ்ணபிள்ளை என்பவரின் மகனும், மகளும் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

மட்டக்களப்பில் மா, சீனி, எரிபொருள் போன்ற பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் பொருட்களின் விலையும் அதிகரித்துள்ளது. வங்கிகள் தொடர்ந்து பூட்டப்பட்டிருப்பதால் பணப்புளக்கம் குறைந்துள்ளது. வெளியிடங்களிலிருந்து பொருட்களுடன் வருவோர் அம்பாறை, மட்டக்களப்பு வீதியில் வழிமறிக்கப்பட்டு இம்சைக்கு உள்ளாக்கப்படுகின்றனர்.

வவுனியாவில் ரவிச்சந்திரன் என்பவர் இந்திய இராணுவத்தால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பில் தொழிற்சங்கவாதி வேலுப்பிள்ளை என்பவர் இந்திய இராணுவத்தால் கைது செய்யப்பட்டுள்ளார்.

10.10.88 (வீரகேசரி)

நாட்டில் உள்ள பல்வேறு பல்கலைக்கழகங்களும் இராணுவம், பொலிசாரின் தீவிர கண்காணிப்புக்குள்ளாகின. பல மாணவர்கள் கைதுசெய்யப்பட்டனர். பெருமளவிலான அரசவிரோத சுவரொட்டிகள், பிரசுரங்கள், புத்தகங்கள் என்பன கைப்பற்றப்பட்டன.

பாதுகாப்புப்படையினரால் தென்பகுதிப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 14 பெண்கள் உட்பட 45 பட்ட வகுப்பு மாணவர்களும், வைத்திய பீடத்தைச் சேர்ந்த 27 பட்ட வகுப்பு மாணவர்களும் கைது செய்யப்பட்டு பூஸா இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தென்பகுதிப் பாடசாலைகள் பலவற்றிலிருந்தும் பல மாணவர்கள் இராணுவத்தின ரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

11.10.88 (வீரகேசரி)

மதவாச்சிப் பொலிஸ் பகுதியில் மகாகோங் கஸ்வெல என்ற கிராமத்தில் புகுந்த தீவிரவாதிகள் 13 ஆண்கள், 13 பெண்கள் 17 குழந்தைகளும் கத்தியால் வெட் டியும், துப்பாக்கியால் சுடப்பட்டும் கொல்லப்பட்டனர்.

யாழ்ப்பாணம் தபாற்கந்தோர் மறு அறிவித்தல் வரும்வரை மூடப்பட்டுள்ளது.

அக்கரைப்பற்றில் ஈ.பி.ஆர் எல். எவ்வைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவர் இனந்தெ ரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

12.10.88 (வீரகேசரி)

ஓமந்தைப்பகுதியில் இந்திய இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 12 பே ரில் 11 பேரின் சடலங்கள் யாழ் வீதி அரச பண்ணையில் எரிக்கப்பட்டன.

அனைத்து அரசியல் கைதிகளையும் விடுவிக்கக்கோரி மட்டக்களப்பைச் சேர்ந்த ரகுநாதன், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த உதயகுமார், திருகோணமலையைச் சேர் ந்த மக்ரேஸ்ட் ஆகியோர் உண்ணாவிரதப் போராட்டத்தில் இறங்கியுள்ளனர்.

கொக்கட்டிச்சோலையில் இயக்கங்களுக்கிடையேயான மோதலில் மூவர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இந்திய இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட கொக்குவிலைச் சேர்ந்த கோணேஸ்வரன் உடல் முழுதும் அடிகாயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டார்.

15.10.88 (வீரகேசரி)

முருங்கனிலுள்ள புளொட் முகாம்மீது புலிகள் தாக்கியதில் ஜெபேட், டிஸ்கோ என்ற இருவர் கொல்லப்பட்டனர்.

16.10.88 (வீரகேசரி)

புலிகள் இயக்கத்தின் யாழ் பிரதேச தளபதி கரிகாலனும், சுன்னாகம் பிரதேசத் தளபதி கஜனும் இந்திய இராணுவத்தால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

யாழ் கொட்டடியைச் சேர்ந்த அருணகிரி ரவீந்திரன், வி. கதிர்காமநாதன், திருநெ ல்வேலியைச் சேர்ந்த மகாதேவன், இணுவிலைச் சேர்ந்த ஒருவர் என நால்வர் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். இறந்தவர்கள் வேறு இயக்க த்தவர்கள்.

18.10.88 (வீரகேசரி)

மாங்குளத்தில் வாந்திபேதி, மூளைக்காய்ச்சல் பரவி வருகிறது. வைத்தியசாலையில் மருந்துகள் இல்லாததால் பல குழந்தைகள் மரணமாகியுள்ளன.

www.tamilarangam.net

மயிலக்கட்டில் பொன்னம்பலம் என்பவரும், கதிரிப்பாயில் சிவ அழகன் என்பவரும் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

சிறுப்பிட்டியில் ஒருவரும், உரும்பராயில் ஒருவரும் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

வெள்ளிக்கிழமை இரவுக்கும் ஞாயிற்றுக்கிழமை அதிகாலைக்கும் இடையிலான 36 மணி நேரத்தில் 20 கொலைகள் நடந்துள்ளன.

19.10.88 (வீரகேசரி)

தெற்கில் 15 பாடசாலை அதிபர்கள் உட்பட 400 பேர்வரை கொல்லப்பட்டுள் ளனர்.

மங்கஓயாக் கிராமத்தில் 6 பேர் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட் டுள்ளனர்.

21.10.88 (வீரகேசரி)

யாழ் பஸ் நிலையத்தில் கோகிலதாஸ் என்ற புலிகளின் முன்னாள் ஆதரவாளர் இனம் தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

வவுனியாவுக்கான ரயில் சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளதால் தபால் சேவை சீர் குலைந்துள்ளது.

22.10.88 (வீரகேசரி)

யாழ் கொன்வென்ற் வீதியில் புலி இயக்க ஆதரவாளரான மகேந்திரன் குணராசா என்பவர் இனம் தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

23.10.88 (வீரகேசரி)

தமிழ் மக்கள் முன்னணி மன்றத் தலைவர் திரு.சிவானந்த சுந்தரம் இனம் தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

புன்னச் சோலைப் பகுதியில் உதயகுமார், திலக் ஆகிய இரு புலி உறுப்பினர்கள் சுட் டுக் கொல்லப்பட்டனர்.

ஜனாதிபதி தேர்தல் டிசம்பர் 19ஆம் திகதி நடக்குமென அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏறாவூர் வட்டுவான் பகுதியில் கணபதிப்பிள்ளை தர்மலிங்கம் என்ற கிராம சேவையா ளரின் சடலம் முற்றாக எரிந்த நிலையில் கண்டெடுக்கப்பட்டது.

27.10.88 (வீரகேசரி)

மன்னார் அடம்பனில் செபமாலை என்பவரின் சடலம் மின்கம்பத்தில் தொங்கவிடப்ப ட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் கிளேட்டன் என்பவரும், சங்கானையைச் சேர்ந்த ரவீந்திரன் என்ப வரும், ஊர்காவற்துறையைச் சேர்ந்த பொன்னுத்துரை பிரான்சிஸ் தம்பதிகளும் இனம் தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

www.tamilarangam.net

# அகதிகள்

## கோவை நந்தன்

இருபக்கமும் தொடர்ந்து, அருக்கருக்காய் உயர்ந்து, வரிசையாய்த் தெரியும் மாடிக் கட்டிடங்களுக்குள் வானத்தை அண்ணாந்து பார்க்க வானத்தின் சிறு பகுதியே தெரியும். வீதிகளில் வித்தியாசமான வர்ணங்களில் சிறிதாய், பெரிதாய் ஓடும் வாகனங்கள். எந்த ஒரு நிமிடத்தையும் வீணாக்க விரும்பாமல் அவசர, அவசரமாகத் தமது கடமையைச் செய்யும் மனிதர்கள். இதைவிட நாய் நன்றியுடையது, மனிதன் நம்ப முடியாதவன் என்று நினைத்தோ என்னவோ மிகவும் அன்பாக அணைத்தபடியோ அல்லது பெல்ற்றில் இணைத்தபடியோ நாய்களைக் கூட்டிச் செல்லும் சில மனிதர்கள். விதவிதமாய் உடுத்தி நாகரிக உலகின் சிகரம் என நினைத்து நடை போடும் இளசுகள். இவர்களுக்கிடையே நானும் ஒருவனாய் சிறு குழந்தைபோல் பரிஸ் நகரை விநோதமாய்ப் பார்க்கின்றேன்.

தூரத்தே உயர்ந்த ஒரு கோபுரம் வானில் தொடுமாற்போல் தெரிய, "அதுதான் சிவா ஈபிள் ரவர்" என்று என்னோடு வந்த நண்பன் நாதன் கூற, நான் எனது நாட்டில் கேள்விப்பட்டதை இங்கு நேரே கண்ணுற்று கண்களை அகல விரிக்கின்றேன்.

"மச்சான், இந்த ஈபிள் ரவர் உலக அதிசயங்களில ஒன்டு. உலகத்தில பிறந்தவன் ஒருக்கால் பரிசுக்கும் வர வேணும். ஒரு பெரிய அதிசயத்தையே இங்கை மனுசன் சிருஷ்டித்து வைச்சிருக்கிறான். இதை நீ இப்ப பாக்கிறதுக்கு குடுத்து வைச்சிருக்கோணும்" நாதன் எனக்கு கூறினான்.

நான் நாட்டைவிட்டுப் புறப்பட்டு நாளையுடன் ஒரு மாதம் முடிகிறது. நாட்டை விட்டுப் பறந்து வந்தபின் இங்கு என்னதான் இருந்தாலும் ஏதோ ஒன்றுக்காக என் மனம் ஏங்கிக்கொண்டிருக்கிறது.

இங்கு நாலு சுவர்களுக்கிடையே ஒரு சிறிய அறையில் ஆறு ஜீவன்களோடு என்னையும் சேர்த்து எழுவர். வழமையாய் படுப்பதற்கே பெட்டி அடுக்குவது போன்று வரிசையாய் நெருங்கிப் படுக்க, நானும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வந்தபின் எனது பெருத்த உடம்பை அறை நண்பர்கள் அறவே விரும்பவில்லை த்தான். அறையிருள் மூச்சு விடுவதற்கே கஷ்டப்பட்டு ஜன்னலைத் திறந்தால் கடும் குளிர் எம்மைப் பதம் பார்க்க, என்ன செய்வதென்று தெரியாமல் ஒருவாறு சமாளிக்க.... எல்லாமே இயந்திர வாழ்வாய் எனக்குப் பட்டது.

"என்ன மச்சான் கனக்க யோசிக்கிறாய்?" எனது சிந்தனையை நாதன் அறுத்தான்.

"இங்க வந்ததிலயிருந்து நாட்டையும், குடும்பத்தையும் பற்றிச் சிந்திக்கிறாய் போல கிடக்கு. இங்கை இருந்து கொண்டு நாட்டை நினைச்சு என்ன பிரயோசனம்? ஆயிரக் கணக்கான மைல் இடைவெளியில இருக்கிறம். நாட்டுப் பிரச்சினையை ஓரளவுக்கு அறியிறதோட எங்கட அலுவலைக் கவனிக்க வேண்டியதுதான்"

எனக்கு நாதன் சொன்னது எரிச்சலூட்டியது. நாட்டில் மக்கள் படும் துன்பங்களையும், கஷ்டங்களையும் நினைக்காமல் சுயநலத்தோடு செய்கின்ற உபதேசத்திலல் அவனை ஒருமுறை திரும்பிப் பார்த்தேன்.

"ஓமோம். நீ நினைக்கிறது எனக்கு விளங்குது. நாங்கள் இங்கை வாழ்ந்தாலும், எங்கட சிந்தனை முழுக்க எங்கட நாட்டிலை இருக்கோணும் என்டு நீ சொல்லுறாய். ஆனா இங்கை இருக்கிற பிரச்சினைக்கே ஒரு முடிவு கிடைக்குதில்லை. எல்லாரும் வந்தவுடனே இப்பிடித்தான். வந்து ரண்டு, நாலு மாதத்தில நாட்டுப் பிரச்சினையை சுமாராய் அறியிற நிலைக்குத்தான் இங்கையிருக்கிறவை கனபேரை நான் அறிஞ்சிருக்கிறன்"

ஈபிள் கோபுரத்தை நெருங்கி விட்டோம். உல்லாசத்தைத் தேடி வந்த பலநாட்டு மக்களும் ஓரிடத்தில் கலக்கின்றனர். கோபுரத்தை தங்கள் புகைப்படக் கருவி மூலம் உள்வாங்கிக் கொள்பவர்கள். கோபுரத்தை அமைத்த விதம் பற்றி வியந்து கொள்பவர்கள். கைகளைக் கோர்த்த வண்ணம் ஒருவரோடொருவர் உராய்ந்து செல்லும் காதல் சோடிகள். இவர்களோடு நானும், நாதனும் அங்கொன்றும், இங்கொன்றுமாய் பார்த்தபடி ஈபிள் கோபுரத்தின் கீழ் வந்து மேல் நுனியைப் பார்க்கின்றோம்.

ஈபிள் கோபுரத்தைப் பார்க்கும்போது யாழ்ப்பாண மணிக்கூட்டுக் கோபுரம்தான் என் மனதில் நினைவுக்கு வருகிறது. யாழ் மத்திய கல்லூரியில் படிக்கின்றபோது வகுப்பறையிலிருந்தே கோபுரத்தில் அமைந்திருக்கும் மணிக்கூட்டைப் பார்த்து, வகுப்புப் பாடங்கள் எப்போது முடியும் என்று காத்துக் கொண்டிருப்பதை நினைத்துப் பார்க்கிறேன். மணிக்கூட்டுக் கோபுரத்தின் மேலால் பறந்து செல்லும் கெலிக்கொப்ரர்களும், விமானங்களும்... எவ்வளவு துயரங்களை எம் மண்ணில் ஏற்படுத்தியுள்ளன. இப்போது நான்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பார்க்கின்ற ஈபிள் கோபுரத்தின் நுனி துப்பாக்கியின் நுனியை இலேசாக ஞாபகமூட்டியது.

இருபத்துநான்கு வருடங்களாக நான் வாழ்ந்த நாட்டைவிட்டு இப்போது இங்கே வாழப் பழகுவது கஷ்டம்தான். அங்கே அகதிகளாகப் பாடசாலையில் வாழுகின்ற சனத்துக்குச் செய்த உதவிகள், கேணியடியிலிருந்து நண்பர்களுடன் நாட்டுப் பிரச்சினை பற்றி விவாதித்த காலங்கள், இரவோடிரவாக போட்டிருந்த உடுப்புகளுடன் வீட்டைவிட்டு அகதியாக வாழ்ந்த காலங்கள், விமானங்கள் மேலால் குண்டு போட பதுங்கு குழிகளுக்குள் ஒருவருக்குப் பின்னால் ஒருவராகப் பாய்ந்து பதுங்கியிருந்த வாழ்வில் எத்தனை சிரமங்கள் இருந்தாலும், அங்கு இருந்த நிறைவு இங்கில்லை.

நாதன் கோபுரத்தின் மேல் ஏறுவதற்காக வரிசையில் நின்று அனுமதிச் சீட்டு வாங்கிக் கொண்டான். மின் ஏணியில் ஆட்களோடு ஆட்களாய் மேலேறிக் கொண்டு பரந்து வெளியே தெரியும் எழிலைக் கண்ணுக்கெட்டிய தூரம்வரை பார்க்கிறேன்.

நாதன் என்னை நோக்கி "சிவா இந்தப் பெரிய பரிஸ் நகரத்திலே உலகநாட்டு மக்களெல்லாம் ஒன்று கூடுகின்றனர். இப்படி மனிதர்கள் இன, மத, நிற, மொழி பேதமின்றி வாழ்ந்தால் எவ்வளவு நல்லாயிருக்கும்" என்றான்.

"அப்பிடியொரு உலகம் நிச்சயமாய் உருவாகத்தான் வேணும். உருவாகத்தான் போகுது. அப்பிடியொரு நிலை வரேக்கதான் உலகம் முழுதும் சமத்துவம் உருவாகும். மனித இனம் சந்தோசமாக வாழும்"

இந்த இடத்தில் எங்கள் சிந்தனையை நினைக்க மனதிற்கு சந்தோசமாகவே இருந்தது. தூரத்தே தெரியும் கறுப்பு நிறங்கள் எனது சிந்தனையை வேறுவிதமாக மாற்றின.

"மச்சான் தூரத்தில தெரியிற கறுப்பு நிறங்கள் எங்கட நாட்டுப் பனைமரங்களாய் இருக்குமோ?"

"உன்ரை கண்ணுக்கு அப்பிடித்தான் தெரியும். எங்கடை நாடு உதில தானே கிடக்கு." கூறிவிட்டு நாதன் சிரித்தான்.

"இல்லை நாதன். மனசில அப்பிடியொரு எண்ணம். என்ரை மண் எவ்வளவு அநியாயங்களைக் காணுது. அங்கை வாழுற மக்கள் எப்பிடியெல்லாம் கஷ்டப்படுகினமெண்டதை இங்கை வந்தவுடனே நாங்கள் மறந்திடமுடியுமே? அதாலதான் என்ரை நினைவுகள் எப்பவும் மண்ணைப் பற்றியே சுத்திச் சுத்தி வருகுது. அது சரி நாதன் நீ எத்தனை தரம் இந்த ஈபிள் ரவருக்கு வந்தனி?"



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

"இரண்டொரு தரம் வந்தனுன். எங்கை நேரம் கிடைக்குது? வந்ததிலயிருந்து விசாவுக்கு அலைய வேணும். வேலையும் குறைஞ்ச சம்பளத்தில ஆளைப் போட்டு முறிக்கிறாங்கள். ஒருநாள் லீவிலயும் உடுப்புத் தோய்ச்சு, குளிச்சிட்டு என்ரை சமையல் முறைக்கு சமைக்கிறதோட வாழ்க்கை தொடர்ந்து போய்க் கொண்டிருக்கு"

"அப்ப நீ வந்து ரண்டு வருசத்தில சந்தோசமாய் வாழேல்ல என்று சொல்லுறாய்"

"உண்மைதான். எங்கட சந்தோசமெல்லாம் எங்கட நாட்டில தான். நாட்டுப் பிரச்சினை தீர்ந்தால் இங்கையிருந்து உழைச்சுக் கொண்டு போய் ஒரு கடையோ அல்லது ஏதாவது ஒரு தொழிலோ தொடங்கலாம் என்டுதான் இருக்கிறன்"

நாதன் சொன்னதைக் கேட்டு மனதுக்குள் சிரித்துக் கொண்டே சொன்னேன் "ஓமோம். உங்களைமாதிரியான ஆட்கள் அங்கை போய் இடிஞ்ச கட்டிங்களைத் திருத்துறதுக்கு கொன்ராக்ட் எடுத்து நல்லாய் உழைக்கலாம்"

அவன் பேசாமலிருக்கத் தொடர்ந்து சொன்னேன் "எனக்குத் தெரியும். இங்கை வந்தவையில கனபேர் ரண்டு வகையான சிந்தனையில இருக்கினம். ஒருவகையினர் நிரந்தரமாய் இங்கை வாழ்க்கையை அமைக்க வேண்டுமென்று விரும்பியினம். மற்ற வகையினர் பிரச்சினை தீர்ந்த பிறகு நாட்டுக்குப் போய் முதலாளி ஆகவேண்டுமென்டு நினைக்கினம். உயிருக்குப் போராடிக்கொண்டிருக்கிற ஜீவன்களைப் பற்றி எந்த நினைப்புமில்லாமல் முதலாளி ஆகி இன்னும் சுரண்டுற எண்ணம்" எனக்கு வெறுப்பாக இருந்தது.

"ஓமோம். இப்பதானே வந்தனியள். உங்கட நினைப்புகளைநாங்கள் போகப் போக பாக்கத்தானே போறம்" நாதன் தலையை வருடியபடி கூறினான்.

நான் எதுவுமே பேசவில்லை. என்னால் எதையுமே சரியாகப் புரிய முடியவில்லை. நாதனும் தாய் மண்ணில் வாழும்போது தன் மண்ணுக்காகத் தீவிரமாக உழைத்தவன்தான். ஆனால் குடும்பத்துக்காக உழைத்த இவனது தகப்பனை இராணுவம் கொன்றபின் தாயார் நாதனை வெளிநாட்டுக்கு அனுப்பி விட்டார்.

அன்று அந்த உயிர்த் துடிப்போடு பாடுபட்ட இவனே இப்படியென்றால், சில காலம் செல்ல நானும் .... ?

சீ அப்பிடி நினைக்கவே படாது. எங்கட மக்களையும், மண்ணையும் மறந்து நான் வாழக் கூடாது. என்னுடைய நினைப்புகளும், செயற்பாடு

www.tamilarangam.net

கரும் எல்லைக்கும் எங்கட மண்ணோட தொடர்பு இல்லாமல் இருக்க வேணும்.

நாதனும், நானும் ஈபிள் கோபுரத்தைப் பார்த்துவிட்டு எதுவுமே பேசாமல் அறைக்கு வந்தோம். இன்றைய சமையல் முறை ஜெயாவினுடையது. அவன் புட்டவித்துக் கொண்டிருந்தான்.

"ஜெயா தோசை சாப்பிட்டுக் கனகாலம். ஆர்தான் சுட்டுத் தாறுங்கள். தோசை சாப்பிடுறதெண்டால் ஊருக்குத்தான் போக வேணும். இல்லையெண்டால் ஆரும் குடும்பகாறர் வீட்ட போக வேணும்." நாதன் ஏக்கத்தோடு சொன்னான்.

அவர்கள் இருவரும் ருசியான உணவு வகைகளைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்க, எனக்கு என் அம்மா ஒருமுறை தோசை சுடும்பொழுது இராணுவம் ஊருக்குள் வந்து தாக்குதல் செய்தபோது, நாங்கள் வீட்டை விட்டு ஓடி பள்ளிக்கூடத்தில் நாலுநாள் இருந்துவிட்டு, திரும்பி வந்து பார்க்கும்பொழுது தோசை மா பூஞ்சணம் பிடித்துக் கிடந்தது ஞாபகம் வந்தது. இப்படி எத்தனை சம்பவங்கள்...

அன்று பள்ளிக்கூடத்தில் அகதியாய் வாழ்ந்த காலங்களையும், இப்போது நான் இங்கே அகதியாக வாழ்கின்ற வாழ்க்கையையும் ஒப்பிட்டுப் பார்க்கிறேன்.



www.tamilarangam.net

அங்கு நாங்கள் வாழ்ந்ததும் அகதிகளாகத்தான். இங்கு நாங்கள் வாழுறதும் அகதிகளாகத்தான். ஆனால் இன்னொரு சிறப்பைக் கூட்டிக் கொடுக்கலாம். அகதிகளாக இவ்விடம் வந்து, இப்போது அகதி என்ற நிலை மறந்து, சொகுசாக வாழ வேண்டும் என்ற நினைப்பிலை, தப்பி விட்டோம் என்ற சுயநல நினைப்புடன் வாழும் அகதிகள் நாங்கள்.

ஜெயா புட்டை அவித்து அனைவருக்கும் பரிமாறியபடி "சிவா நாளைக்கு உனக்கொரு வேலை இருக்கு. மூர்த்தி வேலை செய்யிற றெஸ்ரோறன்டில வேலை. சம்பளம் சரியான குறைவு. ஆனா வந்த புதிசில வேலை கிடைக்கிறது அதிஉஷ்டம்தான். போய் செய்யன்" என்றான்.

வேலை.. என்னுடன் வேலை செய்யும் அறை நண்பர்களின் வேலை அனுபவங்களைக் கேட்டே வேலை என்றவுடன் ஒரு பயம். கஉஷ்டத்திற்காக வேலை செய்யாமல் இருக்க முடியாது.

அப்பா கூட விமானநிலையத்தில் வைத்து "இங்கயிருந்து படிச்சுப்போட்டு இவ்வளவு நாளும் வேலை ஒண்டும் எடுக்கேலாமா இருக்கிறாய் நாட்டுப் பிரச்சினையும் தீர்றதா தெரியேல. இவ்வளவு கஉஷ்டப்பட்டு உன்ன அனுப்பி வைக்கிறன். போய்க் கெதியில உழைச்சு, பட்ட கடனையும் அடைச்சு அங்க நல்ல மாப்பிள்ளையளாப் பாத்து தங்கச்சியளைக் கூப்பிட்டுக் கட்டி வை" என்று சொல்லியிருக்கிறார்.

ஓ.. அப்பா கூட எவ்வளவு புத்தியாய், எல்லாமே அந்நியப்பட்டு தங்கச்சிமாருக்குக்கூட எங்கட மண்ணில கலியாணம் செய்து வைக்க விரும்பாமல் ....... அந்நிய மண்ணில வாழுற மாப்பிள்ளையள் பிழைக்கத் தெரிஞ்சவங்கள் என்டு நினைக்கிறார் போல...

நாளைக்கு வேலைக்குப் போகச் சம்மதித்து விட்டேன். எனக்கு இப்போது வேறு நினைவுகள் வரத் தொடங்கிவிட்டது. உழைச்சு கடன் அடைக்க வேணும். அப்பா சொன்னதுகளை நிறைவேற்ற வேணும். நானும் உழைச்சுப் பெரிய ஆளாய் வரவேணும்

என் சிந்தனைகள் எங்கோ விரிகிறது... ஒருவாறு புட்டை விழுங்கிவிட்டு போர்வைகளை விரித்து அனைவரும் அடுக்கடுக்காய் படுக்கிறோம்.

நாளை வேலையை நினைத்து இப்போதே உடலில் களைப்புத் தென்படத் தொடங்கிவிட்டது. எப்படிப்பட்ட வாழ்வு கிடைச்சாலும் எங்கட மண்ணை, பனை மரங்களை, மணிக்கூட்டுக் கோபுரத்தை, கடல் அலைகளை மறக்கவே கூடாது என்ற வைராக்கியத்துடன் கண்கள் என்னையறியாமல் மெல்ல மெல்ல ....

www.tamilarangam.net

# கேள்வி? பதில்!

வாசகர்கள் அனுப்பி வைத்த கேள்விகளுக்கு இரண்டு பிரபல சட்டத்தரணிகள் பதிலளித்துள்ளார்கள். அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க அவர்களுடைய பெயர்கள் வெளியிடப்படவில்லை. முக்கியத்துவமின்மை காரணமாக சில வாசகர்களின் கேள்விகள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

— கடலோடிகள்

ந. சிறிதரன்
குன்செல்கைளணை

? பயேர்ன் பகுதியில் வேலைவாய்ப்பு அனுமதிப் பத்திரம் வழங்குவதற்கான சட்ட நடைமுறைகள் எவை?

! மேற்கு ஜேர்மனி முழுவதும் சட்டங்கள் பொதுவானவை. 15.01.87ற்கு முன்பு அரசியல் தஞ்சம் கோரி வந்தவர்கள் இரண்டு வருடங்களின் பின்னர் வேலைவாய்ப்பு அனுமதியைப் பெற்றுக்கொள்ள முடியும். 15.01.87இற்கு பின்பு அரசியல் தஞ்சம் கோரி வந்தவர்கள் ஐந்து வருடங்களின் பின்பே வேலைவாய்ப்பு அனுமதியைப் பெற்றுக் கொள்ள முடியும். எனினும் குறிப்பிடப்பட்ட வேலைக்கு மேற்கு ஜேர்மனியரோ, மேற்கு ஐரோப்பியரோ விண்ணப்பிக்காத பட்சத்திலேயே வேலை அனுமதி கிடைக்கும். பயேர்ன் பகுதியில் அரசியல் தஞ்சம் ஏற்றுக் கொள்ளப்படாமல் 'சகிப்புப் பத்திரம்' கிடைத்துள்ளவர்களுக்கு சிலருக்கு சில இடங்களில் சில அதிகாரிகள் வேலை அனுமதி வழங்குகிறார்கள். சில அதிகாரிகள் வழங்குவதில்லை. இந்த முரண்பாடுகள் பற்றி நீதிமன்றங்களில் விசாரணை நடைபெறுகிறது.

? எனக்கு முன்பு வேலைவாய்ப்பு அனுமதிப் பத்திரம் வழங்கியிருந்தனர். இப்போது எனக்குச் சகிப்புப் பத்திரம் தரப்பட்டிருப்பதாலும், வேலை எதுவும் கிடைக்காமையினாலும் எனது வேலைவாய்ப்பு அனுமதிப் பத்திரம் நிராகரிக்கப்பட்டுள்ளது. இதே சமயம் சகிப்புப் பத்திரம் கிடைப்பதற்கு முன்பு வேலை செய்தவர்கள் சகிப்புப் பத்திரம் கிடைத்த பின்பும் வேலை செய்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். எனவே எனது வேலை வாய்ப்பு அனுமதிப் பத்திரத்தை திரும்பப் பெற வாய்ப்புண்டா?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

! முதல் கேள்விக்கான பதிலில் இது பற்றிக் குறிப்பிட்டிருக்கிறேன். ஒவ்வொரு இடங்களிலுள்ள அதிகாரிகள் ஒவ்வொரு விதமாக நடந்து கொள்கிறார்கள். நீங்கள் குறிப்பிட்டுள்ளவர்கள் வேலை செய்யும் இடத்திலுள்ள அதிகாரிகள் அனுமதிப் பத்திரம் வழங்குவதில் அதிகமான பிரச்சினைகளைச் சந்திக்காதவர்களாக இருக்கலாம். நீதிமன்ற முடிவுகள் வரும்வரை உங்கள் கேள்விக்கு பதிலளிப்பது கடினம்.

என். லிங்கரட்னம்
இபென்பியூறன்

? மூன்று வயதில் எனக்கேற்பட்ட இளம்பிள்ளைவாத நோயால் இரண்டு கால்களும், ஒரு கையும் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் நான் எனது தேவைகளைக் கவனிப்பது கஷ்டமாக உள்ளது. ஏனையவர்களுக்கு வழங்குவதைப் போலவே என்க்கும் ஒரே மாதிரியான சமூக உதவிப் பணம்தான் கிடைக்கிறது. வேறு எந்தவிதமான உதவியுமில்லை. எனது சமூக உதவிப் பணத்தைக் கூடுதலாகப் பெறுவதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?

! சமூக உதவிகள் பற்றிய சட்டத்தில் உடல் ஊனமுற்றவர்களுக்கு கூடுதலான சமூக உதவிப் பணம் வழங்கப்பட வேண்டுமெனத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே நீங்களும் விண்ணப்பிக்கலாம். முதலில் நீங்கள் வைத்தியரிடம் சென்று உங்கள் நோயைப் பற்றிய விபரங்கள் அடங்கிய 'உடல் ஊனமுற்றவர்' என்ற விசேட பத்திரத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள். இப் பத்திரத்தை சமூக உதவி அலுவலகத்தில் கொடுத்து மேலதிக சமூக உதவிகளுக்கு விண்ணப்பியுங்கள். உங்கள் விண்ணப்பம் நிராகரிக்கப்படுமானால் சட்டத்தரணியுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

இ. ஆர். இம்மானுவேல்
வூப்பெற்றால்

? சகிப்புப் பத்திரம் பெற்ற ஒருவர் வேறொரு நகரில் வேலை செய்ய அந் நகர தொழில் இலாகா அனுமதி கொடுத்துள்ளது. தூர இடமாதலால் வேலை செய்யும் நகரிலேயே அவர் வீடும் எடுத்துள்ளார். ஆனால் ஆறு மாதத்திற்கொரு முறை விசாவைப் புதுப்பிக்க பழைய இடத்துக்கே வர வேண்டியுள்ளது. வேலை செய்யும் நகரிலேயே இவர் விசாவைப் புதுப்பித்துக் கொள்ள ஏதாவது வழியுண்டா?

! தஞ்சம் கோரிய இடங்களில்தான் விசாவைப் புதுப்பித்துக் கொள்ள வேண்டுமென்று உயர்நீதி மன்றம் முடிவு செய்துள்ளது. அதனால் வேலை செய்யும் அடுத்த நகரத்தில் விசாவைப் புதுப்பிப்பது சாத்தியமற்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

:மிழ் அகதிகள் நகரம் மாறி, மாநிலம் மாறித் திருமணம் செய்யும்போது :மத சமய ரீதியாக எல்லாவற்றையும் முடித்து விடுகின்றனர். ஆனால் சட்ட 'தியாகப் பதிவு செய்வதில் காலதாமதம் ஏற்படுகிறது. கணவன் தான் இரு ்கும் நகரிலேயே மனைவியும் வந்து வசிக்க வேண்டுமென்று விரும்புகிறார். )தற்குச் சட்ட ரீதியாகச் செய்ய வேண்டிய நடவடிக்கைகள் என்ன?

:ாதாரணமாக திருமணமானபின் கணவன், மனைவி இருவரும் ஒரே நகரத்தில் :சர்ந்து வாழ முடியும். பொதுவாக அதிக காலம் இருந்தவரின் இடத்திற்கு ்றுகிய காலம் இருந்தவர் மாறுவதே சாத்தியமாக இருக்கிறது.

; . கருணைநாதன்
ஜிஸ்டசைம்

)லங்கையில் நடப்பது உள்நாட்டுப் போர்தான் என்று கூறி இலங்கைத் தமி ்ர்களுக்கு இங்கே அரசியல் தஞ்சம் மறுக்கப்பட்டுள்ளது. தற்போது இலங் ்கைப் பிரச்சினைகளில் இந்தியா தலையிட்டு தமிழ் மக்களுக்கெதிராக நடா ்ம் போரை என்னவென்று சொல்கிறார்கள்? ஏன் இப்போது இலங்கைத் தமி ்ர்களுக்கு அரசியல் தஞ்சம் கொடுக்கக் கூடாது?

)லங்கையில் நடப்பது உள்நாட்டுப் போர்தான் என்று இப்போதும் நீதி ்மன்றங்களில் சொல்லப்படுகிறது. அதுவும் தற்போது இலங்கையில் இருக்கும் )ந்திய இராணுவம் இனரீதியாக தமிழ் மக்களைத் திட்டமிட்டுக் கொல்லச் :ந்தர்ப்பமில்லையென இப்போது காரணம் சொல்கிறார்கள். மனிதாபிமான ரீதியில் இலங்கையில் நிலமைகள் சுமுகமாகும்வரை தமிழர்களை இங்கே தங் ்வதற்கு அனுமதிக்கலாம் என்றும், ஆனால் அரசியல் தஞ்சம் கொடுக்க முடி ்ாது என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. நீங்கள் குறிப்பிட்டிருக்கும் ரீதியில் ்ார்ல்ஸ்றுக சமஉக்டி நீதிமன்று வழக்குளை விசாரணை செய்தால்தான் )லங்கைத் தமிழ் அகதிகளுக்குச் சாதகமான முடிவு எடுக்கப்படும். இந்நீதி ்மன்றின் முடிவுகள் இன்னும் சில மாதங்களில் வெளிவர இருக்கின்றன.

5 . தயாபரன்
-யூறன்

)லங்கையில் இருந்து வரும் உதவி அரசாங்க அதிபரின் 'திருமணமாகவில் ்லை' என்ற அத்தாட்சிப் பத்திரத்தை கேளின் நீதிமன்றம் ஏற்றுக்கொள்ள ்றுக்கிறது. அதற்கு அவர்கள் கூறும் காரணம் 'இன்றுவரை திருமணமாகவி ்லை' என உ. அ. அ எழுத வேண்டுமாம். இது சாத்தியமற்றது. எந்த ஒரு -. அ. அவும் நாட்டைவிட்டு வெளியேறும்வரைதான் திருமணமாகவில்லை என்று ்முதித் தருவார். இதற்கு நாம் என்ன செய்யலாம்?

www.tamilarangam.net

! இது சாத்தியமற்றது என சட்டத்தரணி மூலம் அதிகாரிகளுக்கு விளக்குங்கள். இன்றுவரை திருமணமாகவில்லை என்ற அத்தாட்சிப் பத்திரத்தை நொத்தாரிசு ஒருவரிடமிருந்தும் நீங்கள் பெற்று அதிகாரிகளிடம் கொடுக்கலாம்.

? கடந்த 19.08.87இல் சமய முறைப்படி திருமணம் செய்து கொண்ட நாங்கள் டியூறன் திருமணப் பதிவுக் காரியாலயத்தில் எமது திருமணத்தை பதிவு செய்து கொள்ளச் சென்றபோது அவர்கள் என்னுடைய பிறப்புச் சான்றிதழின் மூலப்பிரதியைக் கேட்டார்கள். என்னிடம் மூலப் பிரதி இல்லை. ஆங்கில மொழிபெயர்ப்புத்தான் இருக்கிறது. அவர்கள் இதை ஏற்றுக் கொள்ளவில்லை. மூலப் பிரதியை இலங்கையிலிருந்து எடுப்பிப்பதும் முடியாத காரியம். ஏனெனில் எனது வீடும், நான் படித்த பாடசாலையும் சிங்கள இராணுவத்தால் முற்றாகச் சேதமாக்கப்பட்டு, தரைமட்டமாக்கப்பட்டு விட்டன. நான் என்ன செய்வது?

! இலங்கையில் உள்ள கச்சேரிக்குப் பிறப்புச் சான்றிதழின் மூலப் பிரதி வேண்டுமென்று கேட்டுப் பதிவுத் தபாலில் கடிதம் போடுங்கள். இதற்கான பிரதிகளை உங்களுடன் வைத்திருங்கள். எட்டிலிருந்து பத்து வாரங்களுக்குள் பதில் எதுவும் வராவிட்டால் நீங்கள் பதிவுத் தபாலில் கடிதம் அனுப்பியதற்கான அத்தாட்சிகளை திருமணப் பதிவு அலுவலகத்தில் கொடுத்து மூலப் பிரதியை எடுப்பது சாத்தியமில்லையென்று தெளிவு படுத்துங்கள். அத்துடன் நொத்தாரிசு ஒருவரிடம் உங்களுடைய உண்மையான பிறந்த திகதி, ஏனைய விபரங்களைக் கொடுத்து அத்தாட்சிப் பத்திரத்தைப் பெற்று அதையும் திருமணப் பதிவுக் காரியாலயத்தில் கொடுங்கள்.

? இலங்கைத் தூதரகத்தில் திருமணத்தைப் பதிவு செய்வதற்கு அவர்கள் செல்லுபடியான கடவுச் சீட்டைக் கேட்கிறார்கள். எங்களுடைய கடவுச் சீட்டுகள் வெளிநாட்டவர்களுக்கான அலுவலகத்தில்தான் இருக்கின்றன. புதுப்பிக்க வேண்டும் என்று சொல்லிக் கடவுச் சீட்டைக் கேட்டால் அதிகாரிகள் தர முடியாது என்று சொல்லுகிறார்கள். தஞ்சத்தை ரத்துச் செய்து இலங்கைக்குப் போகும்போதான் தருவார்களாம். இந்த நிலையில் என்ன செய்வது?

! இப்படியான சந்தர்ப்பங்களில் வெளிநாட்டவர்களுக்கான அலுவலகம் கடவுச்சீட்டை தந்தேயாக வேண்டும். தர மறுத்தால் நீங்கள் நீதி மன்றம் மூலமாக விண்ணப்பிக்கலாம். சில அதிகாரிகள் தாங்களே நேரடியாக தூதரகத்துக்கு கடவுச் சீட்டை அனுப்பி வைக்கவே விரும்புகிறார்கள். இதற்கும் நீங்கள் சம்மதிக்கலாம்.

? ஒளக்ஸ்பேர்க்கில் இருக்கும் ஒருவருக்கு கடந்த இரண்டு மாதங்களாக விசா கொடுக்கப்படவில்லை. முதலில் விசா கொடுக்க மறுப்பது. பின்னர் விசா இல்லாமலிருந்தார் எனக் காரணம் காட்டித் திருப்பியனுப்புவது.

www.tamilarangam.net

இது சாத்தியமா?விசாவைப் பெற அவர் என்ன செய்ய வேண்டும்?

! இது சாத்தியமில்லை.விசாவைக் கேட்பதற்கு அவருக்கு உரிமை இருக்கிறது. அவருக்கு விசா கொடுக்கப்பட தொடர்ந்து மறுக்கப்படுமானால் அன்ஸ்பாக் நீதிமன்றத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும்.நீதிமன்றம் சாதகமான முடிவையே எடுக்கும்.

பி.சோமசுந்தரம்
பொன்

? நீதிமன்றத்துக்குள் பிரவேசிக்கும் ஒவ்வொருவரும் தமக்கு நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கையுடனேயே பிரவேசிக்கிறார்கள்.ஆனால் இங்குள்ள தமிழ் அகதிகள் தமது நம்பிக்கைகளை இழந்து, தமது அரசியல் தஞ்சம் நிராகரிக்கப்படுமெனத் தெரிந்து கொண்டே நீதிமன்றங்களுக்கு வருகிறார்கள்.இந்த நிலையை மாற்ற முடியாதா?

! இது ஒரு கவலையான விடயம்தான்.உயர் நீதிமன்றம் 1985இலும்,1986 இலும் இலங்கைத் தமிழ் அகதிகளின் அரசியல் தஞ்சத்தை ஏற்றுக் கொள்வதில்லை எனத் தீர்மானித்துள்ளது.இந்த முடிவை அரசியல் ரீதியாகவன்றி வழக்கறிஞர்களால் மாற்றுவது கடினம்.

அந்தோனி
வெஸற்றர்ருல்

? இலங்கைக்குத் திரும்பிச் செல்லும்படி நான் கேட்கப்பட்டுள்ளேன்.இந்த நிலையில் நான் என்ன செய்வது?

! இலங்கை அகதிகளைத் தற்போதைக்கு திருப்பியனுப்புவதில்லை என பயேர்ன் மாநிலம் தீர்மானித்துள்ளது.உங்களைத் திரும்பிப் போகும்படி சொல்வது வெளிநாட்டவர்களுக்கான அலுவலக அதிகாரிகளே.எனவே நீங்கள் உடனடியாக சட்டத்தரணியொருவருடன் தொடர்பு கொள்ளுங்கள்.

---

மேற்கு ஜேர்மனி வாழ் ஆசிரியர்களுக்கு,

கேர்ன நகரத்தில் 24.09.88இல் நடைபெற்ற முதலாவது இலக்கியச்சந்திப்பில், ஆசிரியர்கள் அனைவரையும் ஒன்று கூட்டி மேற்கு ஜேர்மனி முழுவதும் பொதுவான கல்வித் திட்டத்தின் கீழ் கல்விச் சேவையை ஏற்படுத்த வேண்டும் என்ற கருத்து முன் வைக்கப்பட்டது.இத் திட்டத்திற்கு ஒத்துழைக்க விரும்பும் ஆசிரியர்கள் தமது பெயர்,முகவரி போன்ற விபரங்களை கீழுள்ள முகவரிக்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(தொடர்பு முகவரி ம் பக்கத்தில்)

www.tamilarangam.net

# முதலாளித்துவங்கள்

முதலில்
தங்கள் நலன்களே
முதலாளித்துவங்கள்
என்ற மூச்சாய்
அவர்கள் இருந்துவிட்டனர்.

நாங்கள்
முகங்களோடு வழிந்த
வியர்வையிற்தான்
உங்கள் வீட்டுக்
காற்றூடி வீசுகிறது.

தேயிலை மரத்து
அட்டையைப் போலவே
எங்களை அடையாளம் தெரியாமல்
உறிஞ்சி விட்டீர்கள்.


அந்த
உதிரங்களையெல்லாம்
எங்கு ஒளித்தீர்கள்?

எங்கள்
உதிரங்களுக்கும்
வியர்வைகளுக்கும்
உங்களால் ஏன்
பதில் சொல்ல முடியாமற்
போய்விட்டது?

ஏகாதிபத்தியங்கள் இன்னும்
அதோ எங்கள்
குடிசைகளை விட
உயர்ந்த உங்கள்
வீடுகளில் வாழ்கிறது.
இன்னும் எங்கள்
கூரை வழியே
நிலவும் சூரியனும்
முகம் பார்க்கின்றன.

காங்கேசன் கோவிந்குமார்...

www.tamilarangam.net



# கனவை மிதித்தவன்

— பார்த்திபன்

குளிர்கால நேர மாற்றத்தால் இருள் வெகு சீக்கிரமே வந்து விட்டது. தெரு விளக்குகள் கடமையை ஆரம்பித்திருந்தன. குளிர்ந்து போன காற்று சரிவாகத் திறந்திருந்த ஜன்னலினூடாக அறைக்குள் பிரவேசித்து வெப்பமாகியது.

அறையில் ஆளுக்கொரு கட்டிலில் பாலகுமார், ஞானம், முத்து மூவரும் சோகமாக அமர்ந்திருந்தார்கள். பாலகுமாரின் கட்டிலுக்குப் பக்கத்தில் புத்தம் புதிய சூட்கேஸ் ஒன்று பளிச்சென்றிருந்தது. கறுப்பு நிற கோட்டும், சூட்டும் கொழுவியில் மாட்டப்பட்டிருந்தன.

"அப்ப நீ நாளைக்குப் போறாய்?" என்று ஞானம் ஐந்தாவது முறையாகக் கேட்டான்.

"உதுக்குத்தான் நான் சொன்னனான் பயணம் போறன் எண்டு துண்டெழுதி கழுத்தில மாட்டச் சொல்லி" தனது ஆலோசனையைச் செயற்படுத்தாதற்காக முத்து பாலகுமாரைக் கடிந்து கொண்டான்.

"டேய், குழப்பாதைங்கோடா. வீட்டில் எண்டா இந் நேரம் பயத்தம் பணியாரம், மிக்சர் எண்டு செய்து தருங்கள். நீங்கள் என்னடாவெண்டா எப்ப போறாய்? எப்ப போறாய் எண்டு வெறுங் கையோட கலைச்சுக் கொண்டிருக்கிறியள்" என்று பாலகுமார் தனது குறையைத் தெரிவித்தான்.

"அதொண்டுதான் உனக்கில்லாத குறை. எங்களைத் தமிழரெண்டு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கண்டு பிடிச்சாக் காணும்.வைக்கக் கூடாத இடத்திலையெல்லாம் கைவைச்சு மருந்தைத் தேடுறுங்கள்.இதுக்க எங்கட கையால செய்த பலகாரங்களை யும் கொண்டு போறல் சோக்காத்தானிருக்கும்" என்றுன் ஞானம்.

"பொலிசுக்காரங்களுக்கு உடுப்புகளை அவிழ்த்துப் போட்டு உடம்புகளைக் காட்ட வேண்டி வந்தது எங்கட ஆக்களாலதானே.ஒரு நாட்டுக்குப் போகேக்க மனுசராய்ப் போக வேணும்.அதைவிட்டிட்டு கண்ட இடத்திலையெல்லாம் தூளை அடைஞ்சு கொண்டு போறது கை குலுக்கிப்போட்டு விடுவங்களே?அவனவன் எயப்போட்டுக்குள்ளால அந்த மாதிரி றிப்றொப்பா வாறுன்.தமிழன் வந்தாக் காணும்.கோட்டுப் போட்டிருந்தா என்ன?சூட்டுப் போட்டிருந்தா என்ன? பொலிசுக்காறங்களுக்கு முன்னால செக்ஸாய் நிண்டு போட்டுத்தான் மற்ற அலுவலைக் கவனிக்கலாம்." என்று முத்து சலித்துக் கொண்டான்.

"சும்மா சொல்லுறதுதான்.ஆரு எங்கட ஆக்கள் உந்த வேலைகள் செய்ய மாட்டாங்கள்.நாங்கள் வேற நிறம் எண்டபடியால்தான் பொலிசுக்காறங்கள் உப்பிடி ஊத்தை வேலை செய்யிறுங்கள்" ஞானம் முத்துவின் கூற்றை மறுத்தான்.

"ஓமோம்.நீங்கள் நல்ல வடிவு.உங்களை வைச்சு வீடியோப் படம் எடுக்கிறுங்கள்.விசயம் தெரியாம கதையாதை.இஞ்ச மருந்தோட பிடிபடுற ஆக்களைப் பற்றி வீரகேசரியில நியூசுகள் வந்து கொண்டிருக்கு.கனபேர் ஏற்கனவே டிப்பொட் பண்ணைப்பட்டிருக்கினம்"

"டேய் உங்கட கதையளை நிப்பாட்டுங்கோ.செத்த வீட்டுக்க கலியானம் பேசுற மாதிரி நான் நாளைக்கு என்ன நடக்குமோ எண்டு பயந்து கொண்டிருக்கிறன்.நீங்கள் மருந்துக் கதையும்,டிப்பொட் பண்ணுற கதையும் கதைச்சுக் கொண்டிருக்கிறியள்" என்று பாலகுமார் அவசரமாக இடையில் குறுக்கிட்டான்.

"பசிக்குது.முதல் சாப்பிடுவம்" என்று ஞானம் எழும்ப,மற்றவர்களும் எழுந்து சமையலறைக்குப் போனுர்கள்.

புட்டும்,கோழிக் கறியும் தயாராக இருந்தன.சமையல் மணம் அந்த இடத்தைவிட்டுப் போகவில்லை.மின்சார அடுப்பு அவர்களின் நிறத்துக்கு மாற்றப்பட்டிருந்தது.

மூவரும் ஒன்றுகச் சாப்பிட்டார்கள்."புட்டு ஸ்பெசலிஸ்ட் நீ போனுப் பிறகு என்ன செய்யப் போறேமோ?" என்று முத்து கவலைப்பட்டுக் கொண்டான்.

சாப்பிட்டு முடிந்ததும் பழையபடி அவர்கள் கட்டிலில் வந்து

www.tamilarangam.net

அமர்ந்தார்கள்.

பாலகுமார் புதிய தோற்றத்தில் இருந்தான். தலைமுடி கட்டையாக வெட்டப்பட்டு சுருட்டப்பட்டிருந்தது. மீசை, தாடியெல்லாம் சுத்தமாக மழுங்கடிக்கப்பட்டிருந்தன. 'புத்தகத்துக்கு ஏற்ற மாதிரி' அவன் ஆகியிருந்தான்.

"எல்லா விசயமும் ஒரு மாதிரி சரியாக்கியாச்சு. உந்தப்பாசையை நினைச்சாத்தான் வயுத்தைக் கலக்குது" என்றான் பாலகுமார்.

"உதுக்கேன் கனக்க யோசிக்கிறாய்? உனக்குத் தெரிஞ்ச இங்கிலிஷ் பாட்டுக்காறர் அஞ்சாறு பேற்ற பேரை படபடவெண்டு மாத்திமாத்திச் சொன்னியெண்டா ஒரு மாதிரி சேப்பாக்கலாம்" முத்து தனது ஆலோசனையைத் தெரிவித்தான்.

"போய்ச் சேந்த உடன எங்களை மறந்து போடாதை. இஞ்ச இருந்து கனடா போனவையெல்லாம் வீடு வேண்டிறதிலைதான் கவனமா இருக்கினம். இஞ்ச இருக்கேக்க பழகின ஆக்களை மறந்து போச்சினம். நீயும் அப்பிடிச் செய்து போடாதை" என்று ஞானம் உரிமையுடன் கேட்டுக்கொண்டான்.

"சீ சீ. நானேன் அப்பிடிச் செய்யிறன்" பாலகுமார் அவசரமாக மறுத்தான்.

"உப்பிடித்தான் எல்லாரும். அங்க போன பழசுகளை நினைக்கிறதுக்கு நேரம் எங்க கிடைக்குது? அள்ள வேணுமெண்ட அவாவில இருபத்திநாலு மணித்தியாலமும் வேலை செய்யிறது. ரொறன்ரோ, மொன்றியலெண்டு காணியையும், வீட்டையும் வாங்கிறது. இதுக்க காட்டும் கிடைச்சா அவ்வளவுதான். உடன சிலோனுக்குப் போய் ஊரில இருக்கிற வீடு, வளவெல்லாம் வித்துப் போட்டு தாய், தகப்பன், மாமா, மாமி எல்லாரையும் கூட்டிக் கொண்டுவாறது. உவ்வளவையும் பொறுப்பாய் செய்யிறதெண்டா நேரம் போதாது தானே? பிறகென்னெண்டு எங்களுக்குக் கடிதம் போடுறது" முத்து நிதானமாகச் சொன்னான்.

"அதெண்டா ஞாயம்தான்" என்று ஞானம் ஆமோதித்தான்.

"ஒழுங்காய்ப் போய்ச் சேருறேனோ தெரியாது. அதுக்குள்ள கடிதம் போடுற பிரச்சினையைப் பற்றிக் கதைக்கிறியள். யோசிக்க, யோசிக்க நித்திரை வராது போலக் கிடக்கு" சொன்னபடி பாலகுமார் கட்டிலை விட்டெழுந்து கண்ணாடி முன் போய் நின்று தனது பிம்பத்தை அவதானித்தான். அவனுக்கு முழுத் திருப்தி ஏற்படவில்லை.

"லண்டன் ரச் பண்ணுறதை நினைச்சாத்தான் பயம்மாக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கிடக்கு" என்றபடி பாலகுமார் மறுபடி கட்டிலில் வந்து அமர்ந்தான்.

"அப்படி ஏதேன் பிரச்சினைப் படுத்திறேங்களெண்டா, முந்தி எங்கட நாட்டில வந்து சுரண்டினதை மறந்து போச்சா நன்றி கெட்டவங்களே என்டு கேள்" முத்து ஆவேசப்பட்டான்.

"உவ்வளவும் சொல்லுறதுக்கு எனக்கு இங்கிலீஷ் தெரியுமெண்டால் நானேன் இப்படியிருக்கிறன்" பாலகுமார் சலித்துக் கொண்டான்.

இரவு ரெண்டரை மணி வரைக்கும் அவர்கள் கதைத்துவிட்டே படுத்துக் கொண்டார்கள்.

பாலகுமாருக்கு நித்திரை வரவில்லை. விமானம் கட்டுநாயக்கா வில் இறங்குவது போலெல்லாம் பயங்கரமான கனவுகள் கண்டான்.

மறுநாள் பகல் முத்துவும், ஞானமும் புகையிரத நிலையம்வரை சென்று பாலகுமாரை வழியனுப்பி வைத்தார்கள். அவர்கள் மறையும் வரை பாலகுமார் கை காட்டிக் கொண்டிருந்தான்.

அவனுக்குத் துக்கமாகவும் இருந்தது. 'ஜேமனி அருமையான நாடு தான். அநியாயமான சட்டங்களைப் போட்டெல்லோ ஆக்களைக் கலைக்கிறாங்கள். நல்ல வேலையும் கிடைச்சு, எல்லா சிற்றிக்கும் போகவும் விட்டாங்களெண்டா பேசாம இங்கயே இருந்திடலாம்" என்று தனக்குள் நினைத்துக் கொண்டான்.

விமான நிலையத்தின் கீழுள்ள புகையிரத நிலயத்தில் புகையிரதம் தரித்து நிற்க, பலருடன் பாலகுமாரும் இறங்கினான். விமான நிலையத்தில் தென்பட்ட பரபரப்பைப் பார்த்து அவனுக்குச் சாடையாக நடுங்கியது.

( இன்னும் வரும்)

---

ஆசிரியர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

Informationszentrum
Dritte Welt
Overwegstr 31
4690 Herne 1



தகவல்—நா. அன்னராசா

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தூண்டில்

கடல்: 1 நவம்பர் 1988 கலம்: 11

கதைகளில் வரும் பெயர்கள் கற்பனையே.

ஆக்கதாரர்களே அவர்களின் ஆக்கங்களுக்கு பொறுப்பாளிகள்.

ஆசிரியர் குழு........... கடலோடிகள்

வெளியீடு.............. தென்னாசிய நிறுவனம்

முகவரி.................. SÜDASIEN BÜRO
KIEFERNSTR 45
5600 WUPPERTAL·2
WEST GERMANY.
TEL. 0202·507156

© Nachdruck nur mit Genehmigung des Herausgebers.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தூண்டில்

(மாத சஞ்சிகை)

தூண்டிலைக் கிரமமாகப் பெற்றுக் கொள்ள விரும்புபவர்கள் கீழே உள்ள தென்னாசிய நிறுவன முகவரிக்கு வங்கி மூலமாக சந்தாப் பணத்தை அனுப்பி வைக்க வேண்டும்.

சந்தா விபரம் (தபாற் செலவு உட்பட)

6 மாதங்கள் - 20 டி.எம்.
1 வருடம் - 38 டி.எம்.

மேற்கு ஜேர்மனி தவிர்ந்த ஏனைய ஐரோப்பிய நாடுகளுக்கு

சந்தா விபரம் (தபாற் செலவு உட்பட)

6 மாதங்கள் - 25 டி.எம்.
1 வருடம் - 48 டி.எம்.

ஐரோப்பிய நாடுகள் தவிர்ந்த ஏனைய நாடுகளில் உள்ளவர்கள் கடிதம் எழுதி சந்தா விபரங்களை அறிந்து கொள்ளலாம்.

வங்கி கணக்கு இல. 268540
STADT SPARKASSE WUPPERTAL
BLZ 330 500 00

# SÜDASIEN BÜRO




KIEFERNSTR. 45
5600 WUPPERTAL-2
WEST GERMANY.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்